වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report 2022



ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
அனர்த்த முகாமைத்துவ நிலையம
Disaster Management Centre



ஆண்டு அறிக்கை

2022

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

1	அறிமுகம்		1
	1.1	இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை	1
	1.2	அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பில் உள்ளடங்கும் அனர்த்தங்கள	2
2	அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம்		3
	2.1	நோக்கு, பணி, நோக்கம்	3
	2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்	4
	2.3	இடைக்கால முகாமைத்துவ குழு (ஐஆஊ)	4
	2.4	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (யுஆஊ)	5
	2.5	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு	7
	2.5.1	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் தகைமைகள்	7
	2.6	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினர் பற்றிய விபரம்	8
	2.6.1	2022 டிசெம்பர் 31ஆந் திகதியிலான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலகுகளின் சிவில் பணியாட்குழுவினர	8
	2.6.2	2022 டிசெம்பர் 31ஆந் திகதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மாவட்ட அலகுகளில் முப்படையினர் மற்றும் பொலிசாரை பிரதிநிதித்துவப்படுத்தும் பணியாட்குழுவினர்	9
	2.6.3	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு	10
	2.7	2022ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு	11
	2.7.1	அனர்த்தங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல்	11
3	தேசிய மட்டத்திலான முக்கிய செயற்பாடுகள்		17
	3.1	தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2022- 2030 வருடத்துக்காக தயார் செய்யப்பட்டுள்ளது.	17
	3.2	அனர்த்தங்களுக்கு மத்தியில் பரீட்சைகளுக்கு தோற்றுதல் - 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2022	17
	3.3	அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான சர்வதேச தினம் (ஐனுனுசுசு)	18
	3.4	உலக சுனாமி விழிப்புணர்வூட்டல் தினம் (றுவுயுனு)	18
4	2022ஆம் ஆண்டில் தொழிநுட்ப பிரிவுகளிலான முன்னேற்றம்		19
	4.1	முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு	19
	4.1.1	மாவட்ட மட்டத்திலான முன்ஆய்த்த திட்டங்கள்	19
	4.1.2	கிராமிய மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்	20
	4.1.3	பருவப்பெயர்ச்சிக்கான முன்ஆயத்த வேலைத்திட்டங்கள் - மாவட்டம் மற்றும் பிரதேசம்	20
	4.1.4	அனர்த்த நிலைமைகளின்போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகம் கொடுக்க நேரிடும் வன்முறைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் குறித்த கையேடுகளை உருவாக்குதல், விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளித்தல்	22
	4.1.5	வெள்ளம் பற்றிய முன்னெச்சரிக்கை அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பிராந்திய ஆயத்த திட்டமிடல் பற்றிய செயலமர்வு – மல்வத்து ஓயா, யான் ஓயா மற்றும் மீஓயா ஆற்றுப்பள்ளத்தாக்குகள்	22
	4.1.6	சுனாமி அபாயத்துக்கு ஆளாகும் பாடசாலைகளுக்கான அனர்த்த முன்ஆயத்த திட்டம்	23
	4.1.7	இலங்கையில் சுனாமிக்காக பாடசாலைகளில் முன்ஆயத்த செயற்பாடுகளை பலப்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் உலக சுனாமி	24

			விழிப்புணர்வூட்டல் தேசிய தினக் கொண்டாட்டம்	
		4.1.8	பிராந்திய அனர்த்த இடர் தணிப்பு திட்டத்தை தயார் செய்தல் - ஊவா மாகாண வேலைத்திட்டம்	24
	4.2	பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு		25
		4.2.1	தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்	26
		4.2.2	மாவட்ட மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்	30
		4.2.3	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு வெளிநாட்ட பயிற்சிகளில் பங்கேற்ற உத்தியோகத்தர்கள் - 2021 மற்றும் 2022	35
	4.3	தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு		37
		4.3.1	அனர்த்த இழப்புகள் மற்றும் சேதங்களின் மதிப்பீடு	37
		4.3.2	அபிவிருத்தியின் முக்கிய நீரோட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பினை ஒருங்கிணைத்தல்	39
		4.3.3	அனர்த்த அபாயத்தைக் குறைப்பதில் நிறுவனங்களின் பொறுப்புகள் மற்றும் விடயப்பொறுப்புகள் மற்றும் மக்களின் உரிமைகள் பற்றிய ஆவணத்தை உருவாக்குதல்	40
		4.3.4	அனர்த்த அபாய மதிப்பீடு	40
		4.3.5	தொலைதூர உணர்திறனை அடிப்படையாகக் கொண்ட காட்டுத் தீ சேதத்தை மதிப்பிடும் செயன்முறையினை அறிமுகப்படுத்துதல	44
		4.3.6	தினசரி காட்டுத் தீ கண்காணிப்புக்கு ஆன்லைன் ஜிஐஎஸ் அமைப்பை ழுடெநெ புஜளு உருவாக்குதல	44
		4.3.7	அனர்த்த இழப்புகள் மற்றும் சேதங்களின் மதிப்பீடு	45
		4.3.8	னுநளனைெநவெயச தரவுக்களஞ்சியம்	45
		4.3.9	சளைமகெழ அபாய தகவல் இணையத்தளம் (சளைமகெழ றநடி ிழவயட)	46
		4.3.10	பருவப்பெயர்ச்சி வரைபடங்களை தயார் செய்தல்	47
		4.3.11	செய்மதிகளைப் பயன்படுத்தி அனர்த்தங்களுக்கு இலக்கான பிரதேசங்கள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்துதல	47
		4.3.12	மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறையீடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் கருத்தாய்வுகளுக்கு பதிலிருத்தல்	47
		4.3.13	ஏனைய நிறுவனங்களுடன் கூட்டு திட்டங்களை செயல்படுத்துதல்	48
	4.4	அவசர நடவடிக்கை பிரிவு		51
		4.4.1	பேரிடர் சுருக்கம் - 2022	52
		4.4.2	அவசரகால செயல்பாட்டுத் திட்டத்தை இற்றைப்படுத்துதல் (நேழீ) – (2017-2022)	52
		4.4.3	மோசமான வானிலை காரணமாக படகுகளை (டீழயவ) நிலைநிறுத்துதல	53
		4.4.4	முன்கூட்டிய அறிவிப்புகள்	53
		4.4.5	அழைப்புக் கூடம்	55
		4.4.6	பயிற்சி	55
		4.4.7	பெறுகைகள்	62

	4.5	தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் துறை	63
	4.6	நிதிப் பிரிவு	66
		4.6.1 நிதித் தேர்ச்சி (2022 டிசெம்பர் 31ஆந் திகதியில்)	66
	31 டிசம்பர் 2022 இன் நிதிநிலை அறிக்கை		(இணைப்பு 01)
	2013 – 2022 வரையில் 10 வருங்களுக்கான நிதித் தரவுகள்		(இணைப்பு 02)
	2022 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த பிரிவின் கீழான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை		(இணைப்பு 03)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயாரித்த 2022 ஆண்டு அறிக்கையின் வெளியீடு

அமைச்சின் செயலாளரின் செய்தி



அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையினை தங்களின் கரங்களை எட்டச் செய்வதையிட்டு அமைச்சின் செயலாளர் என்ற ரீதியிலும் இடைக்கால முகாமைத்துவ குழுவின் தலைவர் என்ற ரீதயிலும் நான் மிகமகிச்சி அடைகின்றேன்.

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ விடயத்தில் முக்கிய நிறுவனமாகத் திகளும் அனர்த்த முகாமைத்துவ நிலையம், அடைந்துள்ள சிறந்ததொரு முன்னேற்றம், நிறுவனத்தின் தோற்றப்பாடுகள், ஆற்றல்கள் மற்றும் நிதிரீதியான நிலைபேறானதன்மையும் வருடாந்த அறிக்கை மற்றும் அதன் நிதி அறிக்கையின் மூலம் எடுத்தியம்பப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவமானது வெறுமனே ஒரு நிறுவனத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக்கூடியதொரு விடயமல்ல என்பதுடன், முதன்மை நிறுவனம் என்ற ரீதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அமைச்சின் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்களான வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய நிவாரண சேவைகள் நிலையம் மற்றம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் நாட்டில் காணப்படும் ஏனைய தொழிநுட்ப நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதானது பாராட்டத்தக்கது. மேலும், அனர்த்த முகாமைத்துவத்திதனை உலக சமவாயங்களுக்கு அமைய முக்கியமாக, அனர்த்த முகாமைத்துவத்துக்கான செந்தாய் சட்டகம், பரிஸ் சமவாயம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப மேற்கொள்வதன் மூலம் இலக்கு இடப்பட்ட வேலைத்திட்டமொன்றை நோக்கி பயணிப்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2022ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான செயற்பாடுகளில் தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம், பிராந்திய ரீதியான அனர்த்த அபாய தணிப்புக்கான தேசிய செயல்நுணுக்கத்தை தயார் செய்தல், அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை தயார் செய்தல், அனர்த்தங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வையேற்படுத்தல் மற்றும் முதலாவதாக பதிலிருக்கும் குழுவினை பயிற்றுவித்தல் ஆகியவற்றின் மூலம் கொள்திறன் விருத்தியை மேற்கொள்ளுதலானது தெளிவான முன்னேற்றத்தை எட்டியுள்ளது. இதன் வழியாக அனர்த்த முகாமைத்துவத்தைப் போன்றே இடம்பெறக்கூடிய எந்தவொரு அனர்த்தத்திற்கும் சிறப்பாக முகம் கொடுப்பதற்காக முப்படையினர் மற்றும் பொலிஸார் ஒன்றிணைந்து வாரத்தில் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரம் முழுவதும் தயார் நிலையில் இருப்பதன் மூலம் பாதிக்கப்படும் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நாட்டில் நிலவிய நிதி நெருக்கடியின்போதும் தமது இலக்கிடப்பட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. முக்கியமாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (JICA), ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP), உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சியில் (USAID) மற்றும உலக உணவு வேலைத்திட்டம் (WFP) மற்றும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும், அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பினை விரிவாக்கியவாறு தேசிய பாதுகாப்புக்கான புதிய ஒரு அணுகுமுறையை கண்டு பிடிப்பதற்காக சர்வதேசத்தினை அணுகுவதற்கு பல்வேறு வகையில் பங்களிப்பு நல்கிய உள்நாட்டு

பல்கலைக்கழகங்களைப் போன்றே ஐக்கிய இராச்சியத்தின் சல்வர்ட் மற்றம் ஹடர்வீல்ட் பல்கலைக்கழகங்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

கடந்த 2022ஆம் ஆண்டில் பல சவால்களுக்கு மத்தியிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால முன்னெடுக்கப்பட்டுள்ள பணிகளை நான் பாராட்டுகின்றேன். அனர்த்த முகாமைத்துவத்துக்காக அரச திறைசேரியானது வருடாந்தம் முன்னுரிமையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டதுடன், வெளிநாட்டு நன்கொடைகளை வழங்கும் நிறுவனங்களைப் போன்றே ஏனைய ஒத்துழைப்பு நிறுவனங்களும் அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டத்துக்காக குறிப்பிட்டதொரு நிதிப் பங்களிப்பினை வழங்கியுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இந்த வெற்றியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பணிப்பாளர் நாயகம். ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் திரு. சுதந்த ரணசிங்க உள்ளிட்ட பணியாட்குழுவினருக்கு எனது ஆசிகளை தெரிவிப்பதுடன், இதற்கான ஆலோசனை வழங்கல் மற்றும் வழிகாட்டல் வழங்குவதன் மூலம் அமைச்சின் செயலாளராகவும் இடைக்கால முகாமைத்துவ குழுவின் தலைவராகவும் செயற்படுவதற்காக எனக்கு கிடைத்த வாய்ப்பினை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

இறுதியாக காலநிலை மாற்றங்கள் மற்றும் புவி வெப்பமடைதல் காரணமாக கிரமமாக அதிகரித்துவரும் அனர்த்தங்கள், முக்கியமாக வெள்ளம், மண்சரிவு. வறட்சி, மற்றும் சூறாவளி நிலைமைகள் மற்றும் ஏனைய அனர்த்தங்களின் அதிகரிப்பு காரணமாக ஏற்படும் தாக்கங்களை முன்கூட்டியே அடையாளம் காண்பதற்கும் இதற்கு முகம் கொடுக்கும் சவால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு காணப்படுவதுடன், முந்திய வருடங்களிலான அனுபவங்கள் மற்றும் ஈட்டியுள்ள கொள்திறன் அபிவிருத்தியின் விளைவுகள் மீது மிகவும் பாதுகாப்பானதொரு நாளைய தினத்தை இலங்கையினுள் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதுடன், எனது அமைச்சின் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொழிநுட்ப நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றியவாறு இச்சவாலை வெற்றி கொள்ளுமென நம்புகின்றேன்.

இதன்போது இப்பணியை சிறப்பாக மேற்கொள்வதற்காக தலைமைத்துவம் வழங்கிய அதிமேதகு ஜனாதிபதி அவர்கள், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன், எனது அமைச்சின் கீழ் காணப்படும் அனர்த்த முகாமைத்துவ பிரிவில் காணப்படும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு)
WWV,RWP,RSP,USP,NDC,PSC,Mphil
செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு



புவி வெப்பமடைதல், காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள் காரணமாக நாட்டில் கிரமமாக அதிகரித்துவரும் அனர்த்தங்களுடன் 2022ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றின் போதும் அதனை முகாமைத்துவம் செய்வதற்கான சவாலினை வெற்றி கொள்ளும் பொறுப்பினை உரிய அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் வெற்றி கொள்ள முடிந்துள்ளமையினை பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இலங்கையில் அனர்த்த முன்னேற்றத்துக்கான தலைமை பொறுப்பினை வகிக்கும் நிறுவனம் என்ற ரீதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்த நிலைமையினையும் வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்தவாறு பொதுமக்களின் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாத்தவாறு பாதுகாப்பானதொரு சமூகத்தை உருவாக்குவதற்காக முக்கியமாக அனர்த்ததணிப்பு நடவடிக்கைகள், அனர்த்த அபாய தணிப்பு முன்ஆயத்த நடவடிக்கைகள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் ஆகியவற்றின் ஊடாகவும் மேலும் அபாய முன்னெச்சரிக்கை மற்றும் அவசர கருமமாற்றல் செயன்முறையின் வழியாகவும் மக்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை எமது நிறுவனத்தின முக்கிய பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றுடன் மனிதவளம் மற்றும் நிருவாக பிரிவு, நிதிப் பிரிவு உள்ளக கணக்காய்வு பிரிவு ஆகியனவும் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதில் வெற்றி கண்டுள்ளது. 2022 டிசெம்பர் 31 இறுதி ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அளவுசார் முன்னேற்றத்தை அடைதுள்ளது மற்றும் இந்த வருடாந்த அறிக்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களை தயார் செய்து முன்வைப்பதற்கு முடிந்துள்ளமை பாராட்டுக்குரியதொரு விடயமாகும்.

2022ஆம் ஆண்டில் பருவப்பெயர்ச்சி மழையினால் ஏற்பட்ட அனர்த்தங்களான வெள்ளம், மண்சரிவு, மண்மேடுகள் உடைதல், கடும் புயல், இடி மின்னல் ,வறட்சி, தீப்பிடித்தல், வெள்ளத்தில் மூழ்குதல் போன்ற விபத்துக்களினால் 91 பேர் உயிரிழந்தள்ளதுடன், 79பேர் காயமடைந்துள்ளனர். மேலும், குறிப்பிட்ட அனர்த்தங்களினால் சுமார் 185,120 இற்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், மேற்படி அனர்த்தம் காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன. எவ்வாறாயினும், இந்த அபாயங்களை குறைப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம், முக்கியமாக வளிமண்டவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து அபாயத்துக்கு முகம் கொடுத்து வாழும் மக்களுக்கு அபாய முன்னறிவித்தல் விடுத்து இம் மக்களை பாதுகாப்பான பிரதேசங்களுக்கு அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவத்துக்காக தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளில் அனர்த்த முகாமைத்துவ திட்டமான 2022 -2030 தயார் செய்தல், பிராந்திய ரீதியான முகாமைத்துவ திட்டத்துக்கான செயல்நுணுக்கத்தை தயார் செய்தல், நிறுவனரீதியான அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயார் செய்தவற்கான வழிகாட்டல்களை தயார் செய்தல் ஆகியவற்றை விசேட அடைவுகளாக இங்கு குறிப்பிட முடியும். மேலும், இத் திட்டங்கள் அனர்த்தங்களிற்கு மத்தியிலும் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. 2022ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள ரூ.7.5 மில்லியன் பணத்தைப் பயன்படுத்தி முன்ஆயத்த

மற்றும் திட்டமிடல் பிரிவானது மாவட்ட, பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் இடர் முகாமைத்துவத்தை பலப்படுத்துவதற்காக பல்வேறு முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்துள்ளது. மேலும், சுனாமி, வெள்ளம் மற்றும் மண்சரிவு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல், இடர்களை வரைபடமாக்குதல் மற்றும் அபாய நிலைமைகள் குறித்த பகுப்பாய்வு போன்ற நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளது.. இதற்காக சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் மற்றும் தொண்டரமைப்புக்களினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பினை முக்கிமாக பாராட்டுகின்றேன்

அனர்த்த தணிப்பு கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூ.75 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதனைப் பயன்படுத்தி மாவட்ட கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்து இதன் முன்னேற்றத்தை 85% வரையில் கொண்டுவருவதற்கு முடிந்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ விடயமானது கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டியதொரு விடயமாகக் காணப்படுவதுடன், இதில் சகல துறைகளினதும் பங்களிப்பு இன்றியமையாததாகும். இயற்கையாகவும் மனிதர்களினாலும் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்கள் நாட்டில் எந்தவொரு பகுதியிலும் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுவதனால், நீர், தரை மற்றும் வான் ஆகிய அனைத்து துறைகளினதும் செயற்பாடுகளுடன் அனர்த்த அபாய தணிப்பானது இணைதல் வேண்டும். பிரயோகரீதியில் கருத்தில் கொண்டு நேரடியாக அனர்த்த முகாமைத்துவத்தில் பங்களிப்பனை பெற்றுக்கொள்ள வேண்டிய 10 துறைகளை அடையாளம் கண்டு இத்துறைகளில் அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் முக்கிய சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்கான கருத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அவசர கருமமாற்றல் நிலையமானது 24 x 7 மணி நேரம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டதுடன், 2022ஆம் ஆண்டில் நீரில் மூழ்குதல், கடும் புயல், மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை பாதுகாத்தல், பொலிஸார் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்புடன் மீட்பு மற்றும் நிவாரணம் வழங்கும் கருமமாற்றல்களுக்கு பங்களிப்பு நல்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக ஏராளனமான பயிற்சிகள் முதலாவதாக பதிலிருக்கும் குழுவின் கொள்திறனை அதிகரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நாட்டில் காணப்படும் கொவிட் அனர்த்த நிலைமை மற்றும் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் இத்தகைய வெற்றிகளை பெற்றுக்கொள்தற்காக அதனை வழிநாடத்திய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் அதேபோன்று இடைக்கால முகாமைத்துவ குழுவின் அங்கத்தவரான ஓய்வுபெற்ற ஜெனரல் கமல குணரத்ன ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அனர்த்த முகாமைத்துவத்துக்காக பல்வேறு வகையில உதவி வழங்கிய வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், பொதுத்திறைசேரி மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

சுதந்த ரணசிங்க RWP,RSP,MSc,NDU,PSC
மேஜர் ஜெனரல் (ஓய்வு)
பணிப்பாளர் நாயகம்

1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான பிரதான நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும். குறிப்பிட்ட அனைத்துத் தரப்பினரதும் உதவியுடன் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இந்த நிறுவாகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.


அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் செயற்படும் நிறுவனமாக 2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 13வது பிரிவின்படி இந்த நிறுவனம் நிறுவப்பட்டது. தேசிய கொள்கைகளைத் திட்டமிடல் மற்றும் மூலோபாய வழிகாட்டல்கள் தொடர்பான பணி தேசிய சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அதற்கான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. பதில் நடவடிக்கைகளுக்கான பொறிமுறைக்கு அப்பால்பட்ட வகையில் சிறந்த அணுகுமுறை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் புதிய கொள்கைகளுக்கமைய இலங்கையின் ஒட்டுமொத்த அனர்த்த முகாமைத்துவத்தை முழுமையாக உள்வாங்கி அனர்த்த பாதிப்புக்களைக் குறைப்பதற்கான கட்டமைப்பாக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க சட்டம் கருதப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பணிகளாவன அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், முன் ஆயத்த திட்டமிடல், மக்களுக்கு அறிவூட்டல், பாதிப்புக்குள்ளான மக்களுக்கு முன்னெச்சரிக்கைகளை விடுத்தல், அவசர கால கருமமாற்றல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களுடன் இணைந்து நிறுவனங்கள் மற்றும் அனர்த்தங்களுக்குப் பின்னரான நடவடிக்கைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆகியன இடம்பெறுகின்றன.பிரதேச மட்டத்திலிலான இடர் இபாய நிலைமைகளைக் குறைக்கும் செயற்பாடுகளை அனைத்து மாவட்டங்களிலிலும் செயற்படுத்துவதற்காக மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1.1 இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் குறிப்பிடப்படும் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைவாக இடர் முகாத்துவத்துக்கான தேசிய சபையானது 2005ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கிய நிலையமாகத் திகழ்வதுடன், இது அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமரின் உபதலைமைத்துவத்துடனான உயர் மட்டத்திலான சகல அமைச்சுக்களினதும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளதொரு நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் ஏனைய அங்கத்தவர்களாக சட்டத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள கௌரவ அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள் (முதலமைச்சருக்கு சமூகமளிக்க முடியாதவிடத்து அம்மாகாண சபையின் ஆளுநர்) மற்றும் பாராளுமன்றத்தின் எதிர்கட்சி உறுப்பினர்கள் ஐவரை உள்ளடக்கியதொரு குழுவினர் காணப்படுகின்றனர். (குறிப்பு1.1)

இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கட்டமைப்பு



குறிப்பு 1.1: தேசிய சபையின் கூட்டிணைப்பு

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பில் உள்ளடங்கும் அனர்த்தங்கள்

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாத்துவத்தின் கீழ் கொள்ளப்படும் இடர்கள்,

- மண்சரிவு
- சூறாவளி
- வெள்ளம்
- வறட்சி
- தொழிநுட்ப அனர்த்தங்கள்
- சுனாமி
- பூமியதிர்ச்சி
- வான் இடர்கள்
- சமுத்திர இடர்கள்
- தீ
- தொற்றுநோய்கள்
- வெடிப்புகள்
- வான் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக போராட்டங்கள்
- இரசாயன விபத்துக்கள்
- கதிர் தொடர்பிலான திடீர் நிலைமைகள்
- உள்ளக மற்றும் கடற் பிரதேசத்திலான கசிவுகள் உள்ளிட்ட எண்ணெய்க் கசிவுகள்
- அணுசக்தி அனர்த்தங்கள்
- நகர மற்றும் காடுகள் தீப்பிடித்தல்
- கடலரிப்பு
- டொனாடோ, மின்னல் தாக்குதல் மற்றும் கடும் முழக்கத்துடனான சூறாவளி

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பாக, ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்த நிலைமையினையும் வினைத்திறன்மிக்கதாக முகாமைத்துவம் செய்து பொதுமக்களது உயிர் மற்றும் சொத்துக்களைக் பாதுகாத்தவாறு பாதுகாப்பானதொரு சமூகத்தை உருவாக்குதல் அமைந்துள்ளது. இதற்காக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஏழு பிரிவுகளைக் கொண்டதாக அனர்த்த முகாமைத்துவ செயன்முறை அமைந்துள்ளது.

இதற்கேற்ப இதன் முக்கிய பிரிவுகள் பின்வருமாறாகும்.

1. அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு
2. அனர்த்த முன்ஆயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு
4. திடீர் கருமமாற்றல் மற்றும் அபாய முன்னறிவித்தல் பிரிவு
5. மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவு
6. நிதிப் பிரிவு
7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்புக்களை நாடுபூராகவும் நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் மாவட்ட அனர்த முகாமைத்துவ ஒருங்கிணைக்கு பிரிவுகள் சகல மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்தப்படுகின்றது.

2.1 நோக்கு, பணி, நோக்கம்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமொன்றை ஏற்படுத்துவன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைதல்

பணி

இயற்கை, தொழிநுட்பம் மற்றும் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை சீராக முகாமைத்துவம் செய்வதன் மூலம் மக்கள் மத்தியில் பொதுவாக ஒட்டுமொத்த தேசத்தினதும் பாதுகாப்பினை உறுதி செய்தல்

நோக்கம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகிய நாடளாவிய நிருவாக கட்டமைப்பின் மூலம் பின்வரும் பணிகளை நடைமுறைப்படுத்துதல், மற்றும் மேற்பார்வை செய்தல்.

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

- தேசிய கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றையும், தேசிய அவசர கால திட்டமொன்றையும் வகுத்தல்.
- அனர்த்தங்களை வரைபடங்களில் உள்ளடக்குதல் மற்றும் அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடலும்
- பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- முன்ஆயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் உட்பட அனர்த்தங்களின்போதான பதில் நடவடிக்கைகள் மற்றும் முன்ஆயத்தங்களைச் செய்தல்
- முன் அனர்த்த எச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் அவற்றை பிரச்சாரம் செய்தல்
- அவசர கால நிலமைகளின்போதான கருமமாற்றல்களை முகாமைத்துதவம் செய்தல் தேடுதல் மற்றும மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
- அனர்த்த ஆபத்துக்களைக்குறைத்தல் மற்றும் அதனை அபிவிருத்திப் பணிகளில் உள்ளடங்குதல்
- காலநிலை மாற்றங்களுடன் இசைந்து செல்லும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- உரிய நேரத்தில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தலும், அனர்த்த பாதிப்புக்களைக் குறைக்கும் பணிகள் தொடர்பாக அமைச்சுக்கள், அரச அதிகாரிகள், தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்
- அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், அது தொடர்பான பதில் நடவடிக்கைகளை அனர்த்தங்களை அனர்த்தங்களின் பின்னர் வழமை நிலமைக்கு கொண்டு வருவதற்காக வெளிநாட்டு நன்கொடைகளை ஒருங்கிணைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்

2.3 இடைக்கால முகாமைத்துவ குழு (IMC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் கருமமாற்றல் செயன்முறையானது இடைக்கால முகாமைத்துவ குழுவாகும். இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெறுவதுடன், 2022ஆம் ஆண்டில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. .அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவின் கூட்டநடப்பெண் பின்வருமாறாகும்.

அனர்த்த முகாமைத்துவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு) டப்ளிவ்.ஆர்.டபிள்யு.பி.யு.எஸ்பி யுஎஸ்பி என்டீசி பீஎஸ்சி	-	தலைவர்
பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி திருமதி.பீ.டீ.ஐ.எல்.விஜேகுணவர்தன, மேலதிக செயலளர் (பாராளுமன்ற அலுவல்கள்)	-	அங்கத்தவர்
திரு.ஆர்.எம்.டீ.கே.ஜீஇஎன்.பீ.ரணதுங்க, மேலதிக செயலாளர் திறைசேரி கருமமாற்றல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு	-	அங்கத்தவர்
திருமதி.கே.ஏ.எஸ்.மஹேஷி, மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு	-	அங்கத்தவர்
திரு. பேராசிரியர் ஆசிரி கருணாவர்த்தன, பணிப்பாளர் நாயம் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு	-	அங்கத்தவர்
திரு. எச்.யு.ஆர்.பொன்சேக்கா, தலைமை கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பாதுகாப்பு அமைச்சு	-	அங்கத்தவர்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேஜர் ஜெனரல் எஸ்.ரணசிங்க (ஓய்வு) ஆர்டபிள்யபி ஆர்எஸ்பி எம்எஸ்சி என்டியு பிஎஸ்சி	-	செயலாளர்

2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC)

2022 ஆம் ஆண்டு முதல் டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களின் கூட்டிணைப்பு பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	பெயர், பதவி மற்றும் நிறுவனம்	குழுவில் வகிக்கும் பதவி
01	திரு. ஆர்.எம்.டீ.கே.ஜ.என்.பீ.ரணதுங்க, - மேலதிக பணிப்பாளர் நாயகம்- திறைசேரி கருமமாற்றல் திணைக்களம், பொதுத்திறைசேரி	தலைவர்
02	திரு.ஆர்.எம்.பீ.எஸ். ரத்நாயக்க (அங்கத்தவர்) - மேலதிக செயலாளர் (பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்கைகள்), பாதுகாப்பு அமைச்சு	அங்கத்தவர்
03	திரு.எச்.யூ. ஆர்.பொன்சேக்க (அங்கத்தவர்) – தலைமை கணக்காளர், அனர்த்த முகாத்துவ பிரிவு	அங்கத்தவர்
04	திருமதி.எல்.பி.ஜி. சந்தமாலி - கணக்காய்வு அதிகாரி (ப.க.) தேசிய கணக்காய்வு அலுவலகம்	அவதானிப்பாளர்
05	திருமதி.ஜே.ஏ.டபிள்யு.கே.ஜயகொடி - தலைமை உள்ளக கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு.	அவதானிப்பாளர்
06	மேஜர் ஜெனரால் எஸ்.ரணசிங்க (ஓய்வு) - பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாத்துவ நிலையம்	செயலாளர்
07	திரு.ஜே.எச்.பீ.ஜயலத்) – உள்ளக கணக்காய்வாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் திரு.ஜே.எச்.பி.ஜயலத் - உள்ளக கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம்	ஏற்பாட்டாளர்


தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் நிலையத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு மதிப்பீடு காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் குறித்து இதன்போது பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக உள்ளக கணக்காய்வாளரினால் 2022ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள இடர்அபாயத்தை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்துக்கு ஏற்ப, உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் நிறுவனத்தின் கருமமாற்றல் செயன்முறை, கட்டுப்பாட்டு செயன்முறை மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயன்முறை தொடர்பில் காட்டப்பட்டள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் இக்குழுவில் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைய நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134இல்காட்டப்படுள்ள விடயப்பொறுப்புக்கள், முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றிக்கைகளில் காட்டப்பட்டுள்ள ஆலோசனைகள், இலங்கை தரக்கட்டுப்பாடு மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப கணக்காய்வு மற்றும் முகாதைத்துவ குழுவில் விடங்களை ஆய்ந்தறித்து, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கங்களை அடைவதமற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவத்துக்கு தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கணக்காய்வு உசாவல்கள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்படும் அவதானிப்புக்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் விதப்புரைகள் மீது நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் பிழை திருத்தங்களின் அளவுசார்தன்மை மற்றும் தரம் குறித்து இதன்போது மேலும் விடயங்கள் ஆய்ந்தறியப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2022ஆம் ஆண்டுக்கான 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை முறையாகவும் சரியாகவும் முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் முகாமைத்துவத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு ஏற்புடைத்ததாக இலங்கை வளங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மற்றும் விடயப்பொறுப்புக்களின் முன்கூட்டி நிச்சயிக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் நோக்கில், வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல முகாமைத்துவ பிரிவினையும் மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை செலவிடுவதற்காக, அங்கீகாரம் பெறப்பட்டுள்ள காலகட்டத்துக்குள் குறிப்பிட்ட நோக்கங்கள் உண்மையாக அடையப்பட்டுள்ளனவா என்பதையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் மற்றும் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதல் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், இப்பணிகளை எதிர்வரும் ஆண்டுகளிலும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் திட்டமிட்டுள்ளது.

2.5 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

குறிப்பு 2.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறைவேற்றப்படும் பல்வேறு பணிகளையும் வேலைத்திட்டங்களையும் கருத்தில் கொண்டு இந்நிறுவனக் கட்டமைப்பானது தயார் செய்யப்பட்டுள்ளது.



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.5.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் தகைமைகள்

அட்டவணை 2.1: பதவிநிலை உத்தியோகத்தர்களின் தகைமைகள

பெயர்	பதவி	கல்வித் தகைமை
மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க அர்டபிள்யுபி ஆர்எஸ்பி எம்எஸ்பி என்டியு பிஎஸ்சி	பணிப்பாளர் நாயகம்	முதுவிஞ்ஞானமானி (புலம்பெயர் கற்கைகள்) பாகிஸ்தான் விஞ்ஞானமானி (இராணுவ மற்றும் அரசியல் செயல்நுணுக்கம்) (சீனா) விஞ்ஞானமானி (புலம்பெயர் கற்கைகள்) பாகிஸ்தான் டிப்ளோமா (ஆளணி முகாமைத்துவம)
றோஹான் பியந்த சமரக்கொடி	மேலதிக பணிப்பாளர் நாயகம்	முதுவிஞ்ஞானமானி (பகுப்பாய்வு இரசாயனவியல்) முதுவிஞ்ஞானமானி (பகுப்பாய்வு இரசாயனவில்) விஞ்ஞானமானி (விசேட) (இரசாயவியல்).Chem. M.I.Chem. C
திசாநாயக்க முதியன்சேலாகே சுகததாச	பணிப்பாளர் (அறிவுறுத்தல்)	முதுகலைமானி (சமூகவியல்) முதுகலைமானி (குற்றவியல்) பட்டப்பின் படிப்பு (சர்வதேச நடவடிக்கைகள்) கலைமானி (விசேட) (சமூகவியல் மற்றும் குற்றவியல்)
ஜயவீர முதியன்சேலாகே சுனில் ஜயவீர	பணிப்பாளர் (முன்ஆயத்தம்)	முதுவிஞ்ஞானமானி (கிராமிய மற்றும் நகர திட்டமிடல்) பட்டப் பின் படிப்பு (சமூகவியல்) விஞ்ஞானமானி (விசேட) சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு பட்டய நகர வடிவமைப்பாளர்

அமரவீர ஆரச்சிலாகே அநோஜா குமாரி செனவிரத்ன	பணிப்பாளர் (தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	முதுவிஞ்ஞானமானி (புவியியல் தரவியல் மற்றும் புவியியல் மதிப்பீடு) (நெதர்லாந்து) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (மனித வள முகாமைத்துவம்) விஞ்ஞானமானி (விசேட) (புவியியல்சார் டிப்ளோமா (சர்வதேச உறவுகள்) பட்டய பொறியியலாளர் நிறுவனம் (பாகம் 1)
கிரிபிடிய அபேசிங்கஹே நிஷாந்த	பணிப்பாள நிதி)	முதுவிஞ்ஞானமானி (வாழ்க்கைத்தொழில் கணக்கீடு) விஞ்ஞானமானி (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்)
வலிகிந்த பதிரத்னஹலாகே அதீப கமல்ஜித் திலகரத்ன	பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்)	முதுவிஞ்ஞானமானி (முகாமைத்துவம்) கலைமானி டிப்ளோமா(முகாமைத்துவம்)
பிகேடியர் வலிவேரிய லியனகே அனில் கிஷாந்த பெரேரா ஆர்டபிள்யபி ஆர்எஸ்பி யுஎஸ்பி	பணிப்பாளர் (கருமமாற்றல்)	முதுவிஞ்ஞானமானி பட்டம் (பாதுகாப்பு கற்றைகள்) டிப்ளோமா(பாதுகாப்பு முகாமைத்துவம்) டிப்ளோமா (சர்வதேச உறவுகள்) PQHRM (CIPM), NDHRTD (CIPM)

2.6 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாளர் விவரங்கள்

2.6.1 2022 டிசம்பர் 31 இன் படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலகுகளின் பணியாளர்கள்

அட்டவணை 2.2: 2022.12.31 ஆந் திகதியிலான பணியாட்குழுவினர் பற்றிய விபரம்

ஊழியர் விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	மெய் ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	01	01	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	01	01	0
பணிப்பாளர்	06	06	0
உள்ளக கணக்காய்வாளர்	01	01	0
பிரதி பணிப்பாளர்	18	0	18
உதவி பணிப்பாளர்	15	10	05
உதவி பணிப்பாளர் (மாவட்டம்)	25	22	03
கணக்கீட்டு உத்தியோகத்தர்	01	01	0
நிருவாக உத்தியோகத்தர்	01	0	01
பிரத்தியேக உதவியாளர்	01	0	01
விசாரணை உத்தியோகத்தர்	01	01	0
புவியியல் தரவு முறைமை பகுப்பாய்வாளர்	01	00	1
தரவு முறைமை பகுப்பாளர்	01	01	0
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	01	0	01
வலையமைப்பு நிருவாகி	01	0	01
நூல் நிலைய அதிபர்	01	0	01
அபிவிருத்தி உத்தியோகத்தர்	101	0	101

மொழிபெயர்ப்பாளர்	02	0	2
தகவல் தொழிநுட்ப உதவியாளர்	06	04	2
நிழற்புகைப்படக் கலைஞர்	01	01	0
தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர்	03	01	02
வானொலி இயக்குநர்	01	01	0
முகாமைத்துவ உதவியாளர் / அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	201	171	30
சாரதி	39	36	03
அலுவலக உதவியாளர்	35	30	05
மொத்தம்	**465**	**288**	**177**

2.6.2 31 டிசம்பர் 2021 தேதியின்படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டப் பிரிவுகளில் ஆயுதப்படை மற்றும் காவல்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஊழியர்களின் விவரங்கள்

அட்டவணை 2.3: 2021.12.31 திகதிக்கு ஆயுதப்படை மற்றும் காவல்துறையைப் பணியாளர் விளக்கம்

இடம்	இலங்கை இராணுவம்		இலங்கை கடற்படை		இலங்கை விமானப்படை		இலங்கை காவல்துறை		தொகை	
	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்
அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம்	2	8	2	9	1	7	1	11	6	35
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - கொழும்பு	-	-	1	-	1	16	-	-	2	16
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - புத்தளம்	-	-	-	-	1	6	-	-	1	6
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - ஹம்பாந்தோட்டை	-	-	1	-	1	13	-	-	2	13
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - களுத்துறை	1	19	1	-	-	-	-	-	2	19
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - காலி	1	23	-	-	-	-	-	-	1	23
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - மாத்தறை	2	27	-	-	-	-	-	-	2	27
தொகை	**6**	**77**	**5**	**9**	**4**	**42**	**1**	**11**	**16**	**139**
மொத்த தொகை	**83**		**14**		**46**		**12**		**155**	


2.6.3 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

இப்பிரிவுகள் 5 மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. இந்த ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகளிலும் பதவியணியானது, உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகளையும் உள்ளடக்கியிருக்கும்.

மாவட்டம் அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய சாத்திய நிலமைக்கேற்ப மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை வேறுபடும். ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குமிடத்து உதவிப் பணிபாளர்கள் (மாவட்டம்) 25பேர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட 107பேர் 25 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் இணைக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் நிருவாகத்தின் கீழும் ஏனைய மாவட்ட அலகுகள் சிவில் உத்தியோகத்தர்களின் நிருவாகத்தின் கீழும் முன்னெடுக்கப்படுகின்றன.

களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. பின்வரும் உருவப்படம் 2.2இல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை காட்டப்பட்டுள்ளது.



குறிப்பு 2.2: மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை


2.7 2022ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு

2.7.1. அனர்த்தங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் - (www.desinventar.lk)


ஒட்டுமொத்த தாக்கம் - 2022

2022 ஆண்டில் வறட்சி, வெள்ளம், மண்சரிவு, மண்படைகள் சரிதல் கடும் புயல், தீப்பிடித்தல், இடிமின்னல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் 185,120 ஆகும். வெள்ளத்தினால் மாத்திரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை சுமார் 138,071 ஆகும். மேலும், வறட்சி காரணமாக சுமார் 24,626 பேரும், கடும் புயல் மற்றம் சூறாவளி காரணமாக 40,688 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் காரணமாக உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை 91ஆகக் காணப்படுவதுடன் 79பேர் காயமடைந்துள்ளனர். மேலும், 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயிரழப்புக்களின் எண்ணிக்கை ஒப்பீட்டுரீதியில் குறைவடைந்தள்ளது.


(2022/2/07 ஆந் திகதி Desinventar தரவு முறைமைமயிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும் தரவுகளுக்கு அமைய இந்தரவுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. ஆேமலும் இத்தரவு முறைமையானத எப்போதுதம் அறிக்கையிடப்படும் தரவுகளுக்கு அமைய இற்றைப்படுத்தப்படக் கூடும் என்பதை கருத்தில் கொள்ளுங்கள்.)



குறிப்பு 2.3: அனர்த்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ள உயிரிழப்புகள்




குறிப்பு 2.4: அனர்த்தம் காரணமாக நேர்ந்துள்ள உயிரிழப்புகள் மற்றும காயங்கள் (2018-2022)



குறிப்பு 2.5: பாதிக்கப்பட்டவர்களின் பகுப்பாய்வு


<u>வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் - 2022</u>

கடந்த ஐந்து ஆண்டுகளில் இடம்பெற்றுள்ள முழுமையான மற்றும் பகுதியளவு வீட்டு சேதங்களின் ஒப்பீடு பின்வருமாறாகும்.. அவற்றுள் 2022 ஆம் ஆண்டிற்கான 12,324 வீடுகள் பகுதியளவிலும் 174 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.



குறிப்ப 2.6: 2018 முதல் 2022 வரையிலான முழுமையான மற்றும் பகுதியளவிலான வீட்டுத் சேதங்கள்


2022 டிசம்பர் 7,8 மற்றும் 9 ஆம் திகதிகளில் மெண்டிஸ் சூறாவளி காரணமாக, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அதிகளவான வீடுகள் சேதங்கள் பதிவாகியுள்ளன.




குறிப்ப 2.7: 2022 வீடுகளுக்கு தேசங்கள் ஏற்பட்டுள்ள சேதங்கள்

ஒவ்வொரு அனர்த்தங்களினாலும் சேதமடைந்துள்ள வீடுகள் - 2022

2020 ஆம் ஆண்டினுள் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ள வீட்டு சேதங்களைக் கருத்தில் கொள்கையில், கடும் புயல் காரணமாக 10,324 வீடுகள் பகுதியளவிலும் 41 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. மேலும், திடீர் தீப்பிடித்தல் காரணமாக 53 வீடுகள் பகுதியளவிலும், 106 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.இதன்போது 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ஆந் திகதி கஜிமாவத்தையில் இடம்பெற்ற தீப்பிடித்தலை முக்கியமாக குறிப்பிட முடியும்.




குறிப்பு 2.8: அனர்த்தங்களுக்கு ஏற்ப முழுமையாக சேதமடைந்துள்ள வீடுகள்




குறிப்பு 2.9: அனர்த்தங்களுக்கு ஏற்ப பகுதியளவில் சேதமடைந்துள்ள வீடுகள்

2022 வருடத்தில் அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்


மேற்குறிப்பிட்ட அனர்த்த நிலைமைகள் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் அதிகளவான வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதிகளவான வீடுகள் பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அது பற்றிய குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




குறிப்பு 2.10: 2022இல் முழுமையாக சேதமடைந்துள்ள வீடுகள் - மாவட்டரீதியில் 2022




குறிப்பு 2.11: 2022 இல் பகுதியளவில் சேதமடைந்துள்ள வீடுகள் - மாவட்டரீதியில




குறிப்பு 2.12: 2022இலான மரணங்கள்



குறிப்பு 2.13: 2022இல் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள்



குறிப்பு 2.14: 2022இல் பகுதியளவில் சேதமடைந்துள்ள வீடுகள்



குறிப்பு 2.15: 2022இல் முழுமையாக சேதமடைந்துள்ள வீடுகள்


3. தேசிய மட்டத்திலான முக்கிய செயற்பாடுகள

3.1 தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2022- 2030 வருடத்துக்காக தயார் செய்யப்பட்டுள்ளது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமானது (னுஎஆ) 2023 – 2030 செந்தாய் சட்டகத்தின் பிரகாரம் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2023 – 2030 என்பது நாட்டின் முக்கிய அரசு நிறுவனங்கள்.ஃ அமைப்புகள், சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களை உள்ளடக்கிய ஒருங்கியைந்த அணுகுமுறையை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது என்பதுடன், இது பற்றிய மிளாய்வு கூட்டம் 2022 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பங்கேற்பாளர்கள் வரைவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தை மதிப்பாய்வு செய்ய தீவிரமாக பங்களித்தனர் என்பதுடன் ளுகுனுசுசு இல் அடையாளம் காணப்பட்ட நான்கு முக்கிய முன்னுரிமைப் பகுதிகளின் கீழ் சராசரி செயல் திட்டங்கள் மற்றும் உத்திகள் பற்றிய ஆய்வுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இங்கு குழுப் பணி மிகவும் பயனுள்ளதாக இருந்ததுடன் வரைவுத் திட்டத்தின் உள்ளடக்கத்தை மேம்படுத்த தேவையான ஆலோசனைகளைப் பெறவும், தொடர்புடைய ஆதரவு அமைப்புகள் ∴ நிறுவனங்களின் பங்களிப்புடன் உத்தேச எதிர்கால செயல் திட்டங்களை கூட்டாக செயல்படுத்தவும் உதவியது.

3.2 அனர்த்தங்களுக்கு மத்தியில் பரீட்சைகளுக்கு தோற்றுதல் - 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2022



அரசாங்கத்தின் முதன்மைக் கல்வித் தேர்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்படுவதுடன், பரீட்சைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம், தரம் 5 புலமைப்பரிசில் தேர்வு 18 டிசம்பர் 2022 அன்று நடைபெற்றது.

மாணவர்கள் (அதாவது பரீட்சார்த்திகள்) மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், எதிர்பாராத இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியில் தேர்வுகளை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் (டிஎம்சி) பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பிற பங்குதார நிறுவனங்களுடன் இத் திட்டம் உருவாக்கப்பட்டது.

காலநிலையின் முன்எதிர்வுகூற முடியாத தன்மையைக் கருத்தில் கொண்டு, இயற்கை சீற்றங்களின் போது பின்பற்றப்பட வேண்டிய தீர்க்கமான வழிகாட்டல்களை பின்பற்றுதல் மற்றும் எந்தவித தடையுமின்றி தேசிய பரீட்சைகளை நடாத்துவதற்காக மாவட்டங்களைச்

சேர்ந்த உரிய அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமை பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வூட்டி ஒருங்கிணைத்து இத் தேசிய செயற்பாடுகளை உறுதிப்படுத்துமாறு 25 மாவட்ட முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளின் உதவி இயக்குநர்கயளுக்கு அறிவுத்தப்பட்டது. இதற்காக பத்திரிகையாளர் சந்திப்புகள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



2022.05.19 செய்தியாளர் மாநாடு - அரச தகவல் திணைக்களம்

3.3 அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான சர்வதேச தினம் (IDDRR)

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது அனர்த்த தணிப்பக்கான சர்வதேச தினத்தை ஒக்தோம்பர் 13 அன்று கொண்டாடியது, "முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் உடனடி நடவடிக்கை மூலம் எவருக்கும் பேரழிவுகள் ஏற்படாது தடுத்தல்." நிகழ்ச்சி ஒக்தோம்பர் 13, 2022 அன்று "ஊகையெஅழெ புசயனெ" ஹோட்டலில் நடைபெற்றது. இங்கிலாந்தின் ர்ரனனநசளகநைடன பல்கலைக்கழகம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் (ருனுீ) ஆகியவற்றால் நிதி அணுசரணை வழங்கப்பட்டது.





3.4 உலக சுனாமி விழிப்புணர்வூட்டல் தினம் (WTAD)

உலக சுனாமி விழிப்புணர்வு தினத்தை கொண்டாடும் வகையில் 2022 ஒக்டோபர் 28 ஆம் திகதி மட்டக்களப்பு காத்தான்குடிய மத்திய மகா வித்தியாலயத்தில் 600 பாடசாலை மாணவர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

2015 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் (ருே) பொதுச் சபை நாடுகள் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை அழைத்து அனர்த்தங்களை தணிப்பதற்கும் கருத்துதுக்களை பரிமாறிக்கொள்வதற்கும் உலன சுனாமி விழிப்புணர்வூட்டல் தினத்தை (றுவுயுனு) நிறைவேற்றியது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை நவம்பர் 5 ஆம் தேதியை உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக அறிவித்ததுடன் ஆபத்தினை தணிப்பதற்கான புதிய அணுகுமுறைகளை பகிர்ந்துகொள்வதன் மூலம் சுனாமி விழிப்புணர்வை விரிவுபடுத்துவதற்காக நாடுகள் , சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகங்களுக்கு அழைப்பு விடுத்தது.

4. 2022 ஆம் ஆண்டில் தொழிநுட்ப பிரிவுகளிலான முன்னேற்றம்

4.1 முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயார் செய்தல், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவின் பிரதான கடமைகளில் ஒன்றாகும். வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சுனாமி, சூறாவளி ஆகிய இலங்கையில் அடிக்கடி இடம்பெறும் அனர்த்தங்களுக்கான அனர்த்த முன்ஆயத்தப் பணிகளைத் திட்டமிடுதல் அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பணிகளில் ஒன்றாகும்.

அனர்த்தங்கள் ஏற்படும்போது அது சம்பந்தமான பதில் நடடவடிக்கைகளை எடுப்பதற்காக மாவட்ட அடிப்படையில் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்காக அதற்கு உதவும் ஆவணமாக அனர்த்த முன்ஆயத்தத் திட்டத்தைக் குறிப்பிடலாம். மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்களுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உச்ச நிலையில் உள்ள முகாமைத்துவ நிறுவனம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவாகும். குழுவில் அங்கத்துவம் வகிக்கும் துணைக் குழுக்கள், அவர்களின் கடமைப் பொறுப்புக்கள் எவை என்பது ஆவணமயப்படுத்தப்பட்டுள்ளது.

நிர்வாகப் பிரதேசங்கள் தொடர்பான தகவல்கள், நிலவும் இடங்கள், ஆபத்தான நிலமைகளின் விளைவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆபத்து நிலமைகள் தொடர்பான மதிப்பீடுகள், பிரதான நிலையம் தொடர்பான மதிப்பீடுகள், பிரதேசத்தில் உள்ள மானிட மற்றும் பௌதீக வளங்கள், அனர்த்த பதில் நடவடிக்கைப் பொறிமுறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் பொறுப்புக்கள் சம்பந்தமான தகவல்கள் இந்தத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

4.1.1 மாவட்ட மட்டத்திலான முன்ஆய்த்த திட்டங்கள்

2022 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட ரூ.7.50 மில்லியனைப் பயன்படுத்தி மாவட்ட அனர்த்த அலகுகள் மூலம் மாவட்ட அளவிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. நாட்டின் பொருளாதார நிலை, போக்குவரத்து சிரமங்கள், அனர்த்தங்களினால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாவட்டங்களுக்கு ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படுகின்றன.

அட்டவணை 4.1: மாவட்டங்களுக்கு இடையே நிதி ஒதுக்கீடு மற்றும் விநியோகம்

வருடம்	பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி (ரூ.மில்லியன்)	செலவு (ரூ.மில்லியன்)
2020	5.50	4.54
2021	7.50	6.25
2022	7.50	2.43

மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் இடர் முகாமைத்துவ உறுதிப்பாட்டை பலப்படுத்தும்பொருட்டு பல்வேறு முன்ஆயத்த திட்டங்களுக்காக 2022ஆம் ஆண்டினுள் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ திட்டங்களை அச்சிடுதல் மற்றும் தயார் செய்தல் / மீளாய்வு செய்வதற்காக பங்குதார் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுவாரியாக நிதி வழங்கப்பட்டுள்ளது.

4.1.2 கிராமிய மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்

2022 ஆம் ஆண்டில், 23 மாவட்டங்களில் 51 அனர்த்த முகாமைத்துவ திட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதற்காக 533,190.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது.




கிராமிய மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சிக்ள - கண்டி

4.1.3 பருவப்பெயர்ச்சிக்கான முன்ஆயத்த வேலைத்திட்டங்கள் - மாவட்டம் மற்றும் பிரதேசம்

தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்களுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள முன்ஆயத்த செயற்பாடுகளாக, முன்கூட்டிய முன்னெச்சரிக்கை செயன்முறை, அவசரகால இடப்பெயர்வுகள், குழுக்களை ஈடுபடுத்துதல், நிவாரண சேவை நடவடிக்கைகள் மற்றும் முகாம் மேலாண்மை ஆகியவை குறித்து பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டன. இது சாத்தியமான உயிர் மற்றும் சொத்து சேதத்தை குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கனமழை மற்றும் சூறாவளி குறித்த வானிலை ஆய்வுத் துறையின் கணிப்புகள் மற்றும் முன்னறிவிப்புகளின் அடிப்படையில் தேசிய அளவிலான பங்குதாரர் முகமைகள் மற்றும் பதிலளிப்புக் குழுக்கள், நிலச்சரிவுகள் குறித்த தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் நீர்ப்பாசனத் துறை ஆகியவை தேசிய அளவிலான பங்குதாரர் முகமைகள் மற்றும்

பதில்களின் அடிப்படையில் குழுக்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் பூர்வாங்க கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. மேலும் மாவட்ட, பிராந்திய மற்றும் கிராமப்புற மட்டங்களில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் மக்கள் அதை எதிர்கொண்டு உயிர் மற்றும் உடைமைகளுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்வார்களென இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டை ஆண்டுதோறும் பாதிக்கும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில், நாட்டை பாதிக்கும் அதிக மழை மற்றும் பலத்த காற்றின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களை கூட்டி, நாட்டை பாதிக்கக்கூடிய நிலைமைகளுக்கு (வெள்ளம், மண்சரிவு, சூறாவளி) சம்பந்தப்பட்ட மாவட்டங்களை தயார்படுத்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

பருவமழைக்கு முந்தைய திட்டங்களுக்கு ஏற்ப, ஆண்டின் கடைசி காலாண்டில் எதிர்பார்க்கப்படும் வடகிழக்கு பருவமழைக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடங்கியுள்ளது. தற்போதைய சவாலான நேரங்களைக் கருத்தில் கொண்டு, தயார்நிலையைக் கண்டறிந்து செயல்பாடுகள்.்.திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் அவசரகால பதிலிருப்பு தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவை திட்டமிடப்பட்ட பணிகளாகும். கூட்டத்தில் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்களின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அரசு அதிகாரிகள், ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அமைப்புகள், சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், மற்றும் 25 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுகளின் (DDMCUs) உதவி இயக்குநர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.) மற்றும் மாகாண அளவில் உள்ள முக்கிய அரசு அதிகாரிகள் ணுழழஅ தொழில்நுட்பம் மூலம் ஆன்லைனில் கூட்டத்தில் சேர்ந்தனர்.

இது தவிர, 15 மாவட்டங்களில் மாவட்ட பருவமழை முன்ஆயத்த நிகழ்ச்சிகளும், 54 பிரதேச பருவமழை முன்ஆயத்த நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இதற்காக ரூ.1,302,437/- செலவிடப்பட்டது.





4.1.4 அனர்த்த நிலைமைகளின்போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகம் கொடுக்க நேரிடும் வன்முறைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் குறித்த கையேடுகளை உருவாக்குதல், விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளித்தல்

அனர்த்தங்கள்களின்போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் முகாமைத்துவம் குறித்த கையேடு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் UNFPA ஆகியவற்றின் நிதிப் பங்களிப்பில் தயாரிக்கப்பட்டு 19.08.2022 அன்று வெளியிடப்பட்டது. இந்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டதுடன், 612 உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.



பதுளை மாவட்டம்



காலி மாவட்டம்

4.1.5 "வெள்ளம் பற்றிய முன்னெச்சரிக்கை அமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் பிராந்திய ஆயத்த திட்டமிடல் பற்றிய செயலமர்வு – மல்வத்து ஓயா, யான் ஓயா மற்றும் மீஓயா ஆற்றுப்பள்ளத்தாக்குகள்"

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) தொழில்நுட்ப உதவியுடன நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட காலநிலைக்கு தாக்குப் பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ திட்டம் (CRIWMP) மூன்று (3) அடையாளம் காணப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வறண்ட வலயத்திலுள்ள சிறு விவசாயிகளின் காலநிலை அபாயங்கள் மற்றும் அதிதீவிர நிகழ்வுகளுக்கு தாக்குப் பிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதற்காக " மல்வத்து ஓயா, யான் ஓயா மீஓயா ஆற்றுப்பள்ளத்தாக்குகளில் வெள்ளம் குறித்த முன்னெச்சரிக்கை செயன்முறையை பலப்படுத்துதலும் பிராந்திய ஆயத்த திட்டமிடலை வலுப்படுத்துதலும்" தொடர்பான செயலமர்வு 23 டிசம்பர் 2022 அன்று அநுராதபுரத்தில் ஹெரிடேஜ் ஹோட்டலில் நடைபெற்றது.

மேற்படி செயலமர்வு அனுராதபுரம், மன்னார், குருநாகல், புத்தளம், திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதேச செயலகங்களின் வெள்ள முன்னெச்சரிக்கை முறைமைகளை வலுப்படுத்துவது மற்றும் அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது.




4.1.6 சுனாமி அபாயத்துக்கு ஆளாகும் பாடசாலைகளுக்கான அனர்த்த முன்ஆயத்த திட்டம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அணுசரணையில் சுனாமி அபாயத்துக்கு ஆளாகும் தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள 28 பாடசாலைகளுக்கான சுனாமி அனர்த்த முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலை அனர்த்த திட்டங்களை தயார் செய்வது தொடர்பில் 3 நாள் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்காக அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஆசிரியர்கள், அதிபர்கள், வலய மற்றும் மாகாண பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இதில் முதலாவது கருத்திட்டமானது பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் (TOT) வேலைத்திட்டமாக 2020 செப்டெம்பர் மாதம் தென் மாகாணத்தில் 11 பாடசாலைகளுக்காக முன்னெடுக்கப்பட்டதுடன், தென் மாகாணத்தில் இக்கருத்திட்டமானது தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளில் மாகாண கல்வி அமைச்சினால் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களின் பங்கேற்பில் 2022 ஒக்தோம்பர் 25 முதல் 27 வரை முன்னெடுக்கப்பட்டது.


இந்த வேலைத்திட்டத்தின் அடுத்த கட்டமாக பயிற்சி அமர்வின்போது தயார் செய்யப்பட்டுள்ள செயலாற்றுகை திட்டத்தை பின்பற்றும் மற்றும் திட்டமிட்டதன் பிரகாரம் சுனாமி ஒத்திகை உள்ளக செயற்பாடுகளை முன்னெடுப்பதை உறுதிப்படுத்துவதும் பாடசாலைகளினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.




4.1.7 இலங்கையில் சுனாமிக்காக பாடசாலைகளில் முன்ஆயத்த செயற்பாடுகளை பலப்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் உலக சுனாமி விழிப்புணர்வூட்டல் தேசிய தினக் கொண்டாட்டம்

உலக சனாமி விழிப்புணர்வூட்டல் தினம் ஒவ்வொரு வருடம் நவம்பர் மாதம் 05ஆந் திகதியில் கொண்டாடப்படுவதுடன், இதனைக் கொண்டாடுவதற்காக 2022 ஒக்தோம்பர் மாதம் 28ஆந் திகதி மட்டக்களப்ப காந்தான்குடி மத்திய மகா வித்தியாலய வளாகத்தில் 600 பாடாசலை மாணவர்கள் மற்றும் பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்கேற்பில் முன்னெடுக்கப்பட்டது.

2015 இல் ஐக்கிய நாடுகளின் (UN) பொதுச்சபையினால் நாடுகள், சர்வதேச அமைப்புகள் மற்றம் சிவில் அமைப்புக்களுக்கு அழைப்புவிடுத்தவாறு அபாயத்தை தணிப்பதற்கான புதிய அணுகுமுறையை கடைப்பிடிப்பது தொடர்பில் அறிவூட்டுதல் மற்றும் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதற்காக உலக சுனாமி விழிப்புணர்வூட்டல் தினம் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையினால் நவம்பர் மாதம் 5ஆந் திகதி சுனாமி விழிப்புர்வூட்டல் திகதியாக பெயரிடப்பட்டதுடன். நாடுகள். சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகமானத அனர்த்த தணிப்பு தொடர்பிலான புதிய அணுகுமுறையை பரிமாற்றிக் கொள்வதற்கும் சுனாமி பற்றிய விழிப்புர்வூட்டலை விரிவாக்குவதற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





4.1.8 பிராந்திய அனர்த்த இடர் தணிப்பு திட்டத்தை தயார் செய்தல் - ஊவா மாகாண வேலைத்திட்டம்

2022 செப்டெம்பர் மாதம் ஊவா மாகாணத்தை மையமாகக் கொண்டு பிராந்திய அனர்த்த இடர் குறைப்பு மூலோபாய திட்டமிடல் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அந்த திட்டங்கள் பதுளை மாநகர சபை மற்றும் மொனராகலை பிராதேசிய சபை ஆகியவற்றிற்காக வரையப்பட்டுள்ளன. இது தவிர வடமாகாணத்திற்கும் குறித்த வேலைத்திட்டத்திற்கான அடிப்படை விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கிழக்கு மாகாணத்திலும் அதே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த வேலைத்திட்டத்திற்கான நிதியுதவி ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்தத் தொகையான ரூபா 40 மில்லியனில் ஊவா மற்றும் வடமாகாணத் திட்டங்களுக்கு 4.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.






4.2 பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கு இணங்க, அனர்த்தங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும், பொதுமக்களின் புரிதலையும் அறிவையும் அதிகரிப்பதற்கும், அத்துடன் அனர்த்த முகாமைத்துவம் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கும், அனர்த்த முகாமைத்துவ செயல்முறைக்கு பங்களிக்கும் அனைத்து பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களை ஒருங்கிணைத்தல், அனர்த்த முகாமைத்துவ மையத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பிரிவு சம்பந்தப்பட்ட கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டலை வழங்குகின்றது. தேசிய மட்டத்திலிருந்து மாவட்ட மட்டம், பிரதேச செயலக மட்டம் மற்றும் கிராமிய மட்டம் வரை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தற்போதுள்ள அனர்த்த அபாய நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்காக நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2022 இல் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு காலாண்டுக்கு முறையில் வழங்கப்பட்டதுடன் 26.04.2022 அன்று திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்ட 3-2022 சுற்றறிக்கையின்படி, திட்டமிடப்பட்ட சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் கட்டுப்படுத்தப்பட்டதுடன் அதன்படி திறைசேரி நிதி ஒதுக்கீடான ரூ.5.15, அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட ரூ.7.3மில்லியன் நிதியைப் பயன்படுத்தி விழிப்புணர்வூட்டல் பிரிவின் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப்பட்டன.



குறிப்பு 4.2.1: 2022 இல் விழிப்புணர்வூட்டல் பிரிவின் நிதிப் பயன்பாடு

4.2.1 தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்

பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், முப்படைகள் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பங்காளி நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2022 ஆம் ஆண்டில், அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் பணிபுரியும் முப்படைகளின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக விழிப்புணர்வுப் பிரிவினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 4.2.1: பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், முப்படைகள் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பங்காளி நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

தொடர் இலக்கம்	இலக்கு குழு / விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சியின் பெயர்	வேலைத்திடங்களின் எண்ணிக்கை	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து இராணுவ உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி	04	540
02	அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து விமானப்படை உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி	02	76
03	அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து கடற்படை உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி	02	83
04	அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து கொழும்பு பல்கலைகழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு மருத்துவர்களுக்கு விழிப்புணர்வூட்டம் நிகழ்ச்சி	03	36
05	இலங்கையின் அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து ஐக்கிய இராச்சியத்தின் லின்கொன் (Lincoln-UK) பல்கலைக்கழக மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி	01	20
	மொத்தம்	**12**	**755**




அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து ஐக்கிய இராச்சியத்தின் லின்கொன் (Lincoln) பல்கலைக்கழக மாணவர்களை அறிறுத்தும் நிகழ்வு - கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு மருத்துவர்களை அறிவுறுத்தும் நிகழ்வு




இலங்கை மும்படை உத்தியோகத்தர்கள் மற்றும் முல்லைத்தீவு விமானப்படை பயிற்சி நிலைய உத்தியோகத்தர்களுக்கான அவசர பதிலிருப்பு தொடர்பிலான நிகழ்வு

<u>அனர்த்த முகாமைத்துவ செயன்முறையை பாடசாலையின் இணைப்பாடவிதானத்தில் ஒருங்கிணைப்பதற்கான தேசிய திட்டம்</u>

கல்வி அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய சாரணர் சங்கம், தேசிய மகளீர் சாரணர் சங்கம் மற்றும் தேசிய கேடட் படையினர் இணைந்து சாரணர், மகளீர் சாரணர் மற்றும் கேடட்களாக செயற்படும் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி திட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ பாடத்தை உள்ளீர்ப்பதற்கும் மாவட்ட அளவில் சாரணர் இயக்கத்தில் செயலாற்றுபவர்களுக்கும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சியை அளித்து அவர்களை பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் குழுவாக (Trainers of Training) அடையாளம் காணும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில், வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சம்பந்தப்பட்ட பங்குதார அதிகாரிகளக்கு விழிப்புணர்வூட்டும் 02 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

<u>அவசர காலங்களில் ஊனமுற்றவர்களின் உயிர்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய திட்டம்</u>

அங்கவீனமுற்றவர்கள் (People with Disability) அனர்த்தங்களின்போது அதிக பாதிப்புக்குள்ளான (Vulnerability) சமூகப் பிரிவாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி, மாற்றுத்திறனாளி சமூகத்திற்கு பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களால் வழங்கப்படும் முன்னறிவிப்பு அறிவிப்புகளை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டத்தை


தயாரிப்பதற்காகவும், அனர்த்தங்கள் ஏற்பட்டால் அவர்களை வெளியேற்றுவதற்கும் (Evacuation) மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு பரிந்துரைப்பதற்கும் உரிய தரங்களை அடையாளம் காணவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் நிறுவப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயல்முறைக்கு பங்களிப்பு நல்கும் முன்னணி பங்குதார நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 02 நிகழ்ச்சிகள் நிகழ்ச்சி விழிப்புணர்வூட்டல் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஊடக பேச்சுவார்த்தைகள் மற்றும் ஊடகவியலளர்களுக்கு விழிப்புணர்வேற்படுத்தும் நிழ்ச்சிகள்

அவசர அனர்த்த நிலைமைகளின்போதும் அனர்த்தங்கள் குறித்த முன்கூட்டிய எச்சரிக்கை விடுக்கையிலும் அனர்த்த முகாத்துவ நிலையத்தினால் பல்வேற தொழிநுட்ப நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ஊடக பேச்சுவார்ததைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விழிப்புணர்வூட்டல் பிரிவினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல ஊடக அலுவல்களின் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுவதுடன், 2022ஆம் ஆண்டில் அவசர அனர்த்த நிலைமைகள் பறறிய சகல ஊடக பேச்சுவார்த்தைகளும் அரசாங்க செய்தித் திணைக்கள வளாகத்தில் நிதி ஏற்பாடுகளின்றி முன்னெடுக்கப்பட்டன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகள் ஊடாக பொதுமக்களுக்கு தகவல்கள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்கள் மூலம் அனர்த்தங்கள் குறித்த முன்னெச்சரிக்கை மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பான முன்கூட்டிய அறிவிப்புகள் மற்றும் தகவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தவிர, பிரபலமான சமூக ஊடக வலையமைப்புகளை இற்றைப்படுத்துதல் விழிப்புணர்வு பிரிவின் கீழ் உள்ள ஊடக பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. . குறிப்பாக அவசரகால சூழ்நிலையில், தரவு மற்றும் தகவல்கள் உடனடியாக ஊடகங்களுக்கு வழங்கப்படுகின்றன, மேலும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு தெரிவிக்க தேவையான தரவுகள் தினசரி இற்றைப்படுத்தப்படுகின்றன.



அனர்த்த முகாமைத்துவ நிலைய இணையத்தளம்

தேசிய பாதுகாப்பு தின நிகழ்ச்சி

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு தின விழா வருடாந்தம் டிசம்பர் 26 ஆம் திகதி தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வேற்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் இப்பேரழிவினால் உயிரிழந்த மக்களையும் ஞாபகப்படுத்தியவாறு அனுஷ்டிக்கப்படுகிறது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டு நிலவிய சவால்களுக்கு மத்தியிலும் காலி பரூலிய சுனாமி நினைவுத் தூபிக்கு அருகாமையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இடம்பெற்றதுடன், தேசிய பாதுகாப்பு தின நிகழ்ச்சியுடன் இணைந்ததாக சிங்கப்பூர் பௌத்த அமைப்பின் நிதிஉதவியுடன் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, வவுனியா, கேகாலை ஆகிய மாவட்டங்களில் பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை விநியோகிக்கும் வேலைத்திட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

அன்றைய தினம் 25 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளை மையமாக கொண்டு சுனாமி மற்றும் பிற அனர்த்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் இறந்த சமூகத்தை நினைவுகூரும் சர்வமத நிகழ்ச்சிகள் அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் நடத்தப்பட்டது.




தேசிய பாதுகாப்பு தின முதன்மை நிகழ்சு - காலி. பாருலிய சுனாமி நினைவத் தூபிக்கு அருகாமையில்





தேசிய பாதுகாப்பு தினத்தையொட்டியதாக பாடசாலை கருவிகளை பகிர்ந்தளித்தல் காலி, பாருலிய சுனாமி நினைவக் தூபிக்க அருகாமையில்

4.2.2 மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவுகளால் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

நாட்டில் அனர்த்த முகாமைத்துவ செயல்முறையை திறம்பட செயல்படுத்த, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளை நிறுவி, அந்தந்த மாவட்டங்களில் தற்போதுள்ள அனர்த்த முகாமைத்துவ செயல்முறையை முன்னெடுக்கும் பொறுப்பை மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கியுள்ளது. இதன்படி, அனர்த்த அபாயப் பகுதிகள் கண்டறியப்பட்டு, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, சமூகம் மற்றும் பங்குதாரர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட, பிராந்திய மற்றும் கிராமப்புற மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டிற்காக, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவினால் 124 பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. உலக உணவுத் திட்டத்தின் நிதி ஏற்பாட்டில் மாவட்ட மற்றும் பிரதே மட்டத்தில் அபிவிருத்தி திட்டமிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் (Planning Officers), பொறியியலாளர்கள் (Engineers) மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக (Technical Officers) 06 திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன்படி, பல்வேறு இலக்கு குழுக்களைச் சேர்ந்த 6950 பேர் இந்த நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



குறிப்பு 4.2.2: மாவட்டரீதியிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்வுகள்



அ.உத்தியோகத்தர்களுக்கான தீ பாதுகாப்பு நிகழ்வு - அம்பாறை



முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவ பயிற்சி - மாத்தளை



இளைஞர் தொண்டு குழுக்களுக்கான உயிர்பாதுகாப்பு நிகழ்வுகள் - இரத்தினபுரி



படகு இயக்குதல் பற்றிய பயிற்சி - குருநாகல்



அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து சகாதார துறை உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்- குருநாகல் மாவட்டம்



அனர்த்த முகாமைத்துவம் குறித்து பாதுகாப்ப தரப்பினரை அறிவுறுத்துதல் - களுத்துறை மாவட்டம்



மண்சரிவு குறித்து கிராமிய மக்களை அறிவுறுத்தல் - நுவரெலியா



அனரத்த அபாய முகாமைத்துவம் குறித்து உள்ளூராட்சி உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல் - கிளிநொச்சி

மாவட்ட மட்டத்திலான கண்காட்சிகள் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

விழிப்புணர்வூடல் பிரிவினால் தயார் செய்யப்பட்டுள்ள கண்காட்சி தொகுதிகளைப் பயன்படுத்தியவாறு பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்துக்கு விழிப்புணர்வேற்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் கண்காட்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.இதற்கமைய 2022 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான 04 கண்கட்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்தில் உலக சிறுவர தினத்தையொட்டியதாக முன்னெடுக்கப்பட்ட " உல சிறுவர் தின ரூவன்வெல்ல கொண்டாட்டம்" சபரகமுவா பல்கல்லைக்கழகத்தினால் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்ட "GEOWEEK" கல்விக் கண்காட்சி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ சமல் ராஷபக்ஷ கல்லூரி மற்றும் திஸ்ஸமஹாராம யடால திஸ்ஸ ஆரம்ப கல்லூரியில் முன்னெடுக்கப்ட்ட கண்கண்காட்சியின்போது கண்காட்சிக் கூடங்களை முன்னெடுப்பதற்கும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இக்கண்காட்சிக் கூடங்களைப் பார்வையிடுவதற்கு பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களென சுமார் 10,000 இற்கு அதிகமானோர் கலந்துகொண்டனர்.

அனர்த்த அபாயங்கள் காணப்படும் இடங்களில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான பதாதைகளைப ் பொருத்தும் வேலைத்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நீண்ட காலமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் ஊடாக பல்வேறு அனர்த்தங்கள் தொடர்பில் அனர்த்த அபாயங்கள் காணப்படும் பிரதேசங்களில பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக பதைதைகளைப் பொருத்திவருகின்றது. சுனாமி, மண்சரிவு, காட்டுத் தீ, நீரில் மூழ்குதல், ஆறுகள் நீர்த்தேங்கங்களை அண்மித்த வெள்ளப்பெருக்கு, முதலைகளினால் ஏற்படும் ஆபத்துக்கள் ஆகிய பல்வேறு அனர்த்தங்கள் தொடர்பில அபாயங்கள் காணப்படும் பிரதேசங்களில வாழும் மக்களையம், இப்பிரதேசங்களுக்கு வெளியே இருந்து வருகை தரும் மக்களையும் வெளிநாட்டவர்களையும் அறிவுறுத்துவதற்கான தகவல்களை காட்சிப்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது. இதற்கயை 2022ஆம் ஆண்டில் அனர்த்த அபாய பதாதைகள் தயார் செய்யப்பட்டு அவை உரிய இடங்களில் பின்வருமாறு பொருத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 4.2.2: அனர்த்த அபாயங்கள் காணப்படும் இடங்களில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான பதாதைகளைப ் பொருத்தும் வேலைத்திட்டம்

தொடர் இலக்கம்	மாவட்டம்	பதாதைகளின் எண்ணிக்கை	பொருத்தப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள்
1	அம்பாறை	14	லாகுகல (1), பொத்துவில் (2), திருக்கோவில் (1), ஆலயடிவேம்பு (2), அட்டாளைச்சேனை (4), சாய்ந்தமருது (2), நிந்தவூர் (2)
2	காலி	06	பம்பலப்பிட்டி (1), மாதம்பை (1), ஹிக்கடுவ (1), ரத்கம (1), கடவத்சதர (1), ஹபராததூவ (1)
3	மட்டக்களப்பு	06	கோரளேபத்து வடக்கு (1), கல்முனைபத்து (1), காத்தான்குடி (1), மன்முனை வடக்கு (1), ஏறாவூர் பத்து(1), மன்முனை தெற்கு மற்றும் எருவில்பத்து (1)
4	அம்பாந்தோட்டை	06	அம்பாந்தோட்டை (2), தங்கல்ல (2), அம்பலாந்தோட்ட (1), திஸ்ஸமஹாராம (1)
5	மாத்தறை	06	மாத்தறை (2), வெலிகம (2), தெவிநுவர (2)
6	கேகாலை	07	தெஹிஓவிட பிரதே செயலகப் பிரிவிலான அபாயமிக்க பிரதேசங்கள் மற்றம மா ஓயாவை அண்டிய அபாயமிக்க பிரதேசங்கள்
மொத்த பதாதைகளின் எணணிக்கை		**45**	

<u>அனர்த்த முகாமைத்துவம் குறித்து மாவட்ட மட்டத்தில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம்</u>

அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் அனர்த்த தொடர்பாடல் முறைகளை கையாண்டவாறு அனர்த்த தொர்பாடலின்போது செய்திகைள வெளியிடுகையில் ஊடகவியலாளர்கள் முகம் கொடுக்கும் சவால்களை குறைத்துக்கொள்ளுதல் மற்றும் தொழிநுட்ப நிறுவனங்களுடன் காணப்படும் ஒருங்கிணைப்பினை பலப்படுத்துவதற்காக ஊடகவியலாளர்களின் பங்களிப்பினை பராட்டுவதற்கும் முகமாகக மாவட்ட மட்டத்தில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. 2022ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக வடகிழக்கு பருவப்பெயர்ச்சி மழை மற்றும் அனர்த்தங்கள் நிகழக்கூடிய அனர்த்தங்களை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர்களை அறிவுறுத்துவதற்காக (World Vision) நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டுடன் நிகழ்சிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்கான மனித வளப் பங்களிப்பு மற்றும் ஒருங்கிணைப்பானத விழிப்புணர்வூட்டல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.




பிரதேச ஊடகவியலளர்களை அறிவுறுத்தும் நிகழ்வு - அநுராதபுரம் மாவட்டம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினருக்கான கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ துறையில் காணப்படும் சவால்களை வெற்றி கொள்வதற்காக இந்த உத்தியோகத்த்ர்களின் அறிவு மற்றும் அநுபவங்களை மேம்படுத்துவது அவசியம் என்பதுடன், அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் உயிர் மற்றும் சொத்து இழப்புக்களை தணிப்பதற்காக தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் முனைப்புடன செயற்படும் இந்த உத்தியோகத்தர்களுக்கு இப்பணிகளை இலகுவாக மேற்கொள்வதற்காக நவீன தொழிநுட்ப அறிவினை வழங்குவது அவசியமானதாகும். இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்களின் அறிவினை வளர்ப்பதற்காக பின்வரும் வேலைத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 4.2.3: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினருக்கான கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள்

தொடர்இலக்கம்	வேலைத்திட்டம்	வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	அவசர அனர்த்த பதிலிருப்பு செயற்பாடுகளுக்கான இணைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல்கள் மற்றும் SOP பகிர்ந்துகொள்ளுதல் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்களுக்கான வேலைத்திட்டம்	01	25
02	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் இணைந்துள்ள புதிய முப்படை உதவி பணிப்பாளர்களுக்கான கொள்திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம்	01	09
03	அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்களுக்கான அவசர நிலைமைகளின்போது பயன்படுத்தப்படும் கருவிகளைப் பயன்படுத்துவது தொடர்பிலான பயிற்சி வேலைத்திட்டம்	01	15
04	அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்களுக்கான டொனர் கருவினை கையாள்வது தொடர்பிலான இருநாள் பயிற்சி வேலைத்திட்டம்	01	18
05	களஞ்சிய முகாமைத்துவ நிதிப்பிரிவின் விடயப்பொறுப்புக்கள் தொடர்பிலான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள்	01	01
06	சுற்றாடல் முகாமைத்துவ முறைமைக்கான உள்ளக கணக்காய்வு தொடர்பிலான இருநாள் வேலைத்திட்டம் (இந்த நிகழ்ச்சிக்கான நிதி உதவியானது உலக உணவு திட்டத்தினால் வழங்கப்படுகின்றது.)	01	02

07	அனர்த்த அபாய முகாமைத்துவத்துக்கான புவியில் 111தொழிநுட்ப பயன்பாடு தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்களுக்காக கொழுப்பில் நடாத்தப்பட்ட 5நாள் தங்குமிடமற்ற பயிற்சி வேலைத்திட்டம் (கொழும்பு பல்கலைக்கழக புவியியல் கற்றைகள் பிரிவு	01	15
08	அனர்த்த முகாமைத்துவத்துக்கான புவியியல் 111 தொழிநுட்ப பயன்பாட தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளின் உத்தியோகத்தர்களுக்கான 5நாள் வதிவிட பயிற்சி வேலைத்திட்ம் (நிதிப்பங்களிப்பு உலக உணவு வேலைத்திட்டம்) - கொத்மலை சர்வதேச பயிற்சி நிலையம்	01	24
09	முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் விடயப்பரப்பினை உள்ளடக்கும் பயிற்சி வேலைத்திட்டங்கள். அனர்த்த முகாமைத்துவ நிலைய சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கான வேலைத்திட்டங்கள்	01	15
10	அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட்குழு முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தமிழ் மொழித் தேர்ச்சி வேலைத்திட்டங்கள்	01	39
11	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சாரதிகள் மற்றம் அலுவலக உதவியாளர்களுக்கான தமிழ் மொழித் தேர்ச்சி வேலைத்திட்டங்கள்	01	27
மொத்தம்		**11**	**190**

4.2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள் 2021 மற்றும் 2022

அட்டவணை 4.2.4: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள் 2021 மற்றும் 2022அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினருக்கான கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள்

	உத்தியோகத்தரின் பெயர்	பதவி	நாடு	காலவரையறை	நாட்கள்	நிகழ்ச்சியின் பெயர்
2021						
1	சுகத் திசாநாயக்க	பணிப்பாளர் (விழிப்புணர்வூட்டல்)	இந்தியா	2021 டிசெம்பர் 20 - 22	3 நாட்கள்	பிம்ஸ்டெக் நாடுகளுக்கான முப்படை மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த உதவி பயிற்சிகள் (PANEX - 21)
2	கெப்டன் (எஸ்எஸ்டி0 எச்.என்.எஸ்.பெரேரா	முப்படை ஒருங்கிணைப்பாளர்	இந்தியா	2021 டிசெம்பர் 20 - 22	3 நாட்கள்	பிம்ஸ்டெக் நாடுகளுக்கான முப்படை மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த உதவி பயிற்சிகள் (PANEX - 21
3	எச்.எம்.ஏ.சி.பண்டார	உதவி பணிக்காளர் (கேகாலை)	இந்தியா	2021 டிசெம்பர் 20 - 22	3 நாட்கள்	பிம்ஸ்டெக் நாடுகளுக்கான முப்படை மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த உதவி பயிற்சிகள் (PANEX - 21
4	பிறகேடியர் யுஏஏபி உபேசிறிவர்த்தன	பணிப்பாளர் அவசர கருமமாற்றல)	பங்களாதேஷ்	2021 ஒக்தோம்பர் 26 - 28	3 நாட்கள்	அனர்த்த பதிலிருப்பு பயிற்சி மற்றும் பரிமாற்றல் (DREE)
2022						
1	எஸ். கோகுலராஜன்	உதவி பணிப்பாளர் (கிளிநொச்சி)	துர்க்கி	2022 மே 16 - 23	8 நாட்கள்	IORA-TIKA பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான வேலைத்திட்டம் "அனர்த்த அபாயங்களை தணிப்பதற்காக

						சமூக தலைவர்களை ஒழுங்கமைத்தல்" மற்றும் அனர்த்தங்களின்போது தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுதல்
2	இஷாரா தில்ருக்ஷி	தரவுப் பகுப்பாய்வாளர்	மொரிஷஸ்	2022 ஜீன் 13 - 17	5 நாட்கள்	IORA - UNITAR புவியியல் தகவல் தொழிநுட்பம் பற்றிய பயிற்சி பாடநெறி (GIT)
3	கே.திலீபன்	உதவி பணிப்பாளர் (மன்னார்0	ஹவாய்	2022 ஓகஸ்ட் 15 - 26	12 நாட்கள	அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனிதாபிமான உதவிகள் பற்றிய சிறப்பு நிலையம் (CFE-DM) சுகாதார அவசர நிலைமைகள் பற்றிய (H.E.L.P) செயலமர்வு
4	ஏ.எம்.ஆர்.கே.ரத்நாயக்க	உதவி பணிப்பாளர் (தணித்தல்)	இந்தியா	2022 ஓகஸ்ட 31 - 02 செப்டெம்பர்	3 நாட்கள்	புவி தரவு அடிப்படையில வறட்சியை மதிப்பீடு செய்தல் மற்றும் தென்ஆசிய பஞ்ச முகாமைத்துவ தரவு முறைமை (SADMS)
5	கே.எம்.ஜி.டி.ஈ. வைத்தியரத்ன	உதவி பணிப்பாளர் (தொடர்பாடல்)	மொன்கோலியா	2022 செப்டெம்பர - 11	7 நாட்கள்	2022 பெசிபிக் தாக்குப் பிடிக்கும் அனர்த்த பதிலிருப்பு பயிற்சிமற்றம் பரிமாற்றம் (DREE)
6	ஏ.ஏ.ஏ.கே.செனவிரத்ன	பணிப்பாளர் (தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	தாய்லாந்து	2022 செப்டெம்பர 27 - 29	3 நாட்கள்	அனர்த்த பதிலிருப்பு பற்றிய வலய செயலாமர்பு மற்றும் ஆசிய பதிலிருப்பு பற்றிய வரைவு
7	மஹேந்திர ஜகத்	உதவி பணிப்பாளர் (மாவட்டம)	பங்களாதேஷ்	2022 ஒக்தோம்பர் 30 - நவம்பர் 03	5 நாட்கள்	அனர்த்த பதிலிருப்பு மற்றும் பரிமாற்றம் (DREE)
8	ஜ.எம்.தனுஜா சமன்மலி பெர்னாந்து	உதவி பணிப்பாளர் (தணித்தல், ஆராய்ச்சிஈ அபிவிருத்தி)	ஜெர்மன்	2022 நவம்பர் 29 - 30	2 நாட்கள்	அபாய சம்பவங்கள் மற்றும் இலாப நட்டங்களை அறிதல பற்றிய தொழிநுட்ப விசேட மன்றம்
9	டபிள்யு.பி.ஏ.கே.திலகரத்ன	பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிருவாகம்)	மனீலா, பிலிப்பின்ஸ்	2022 டிசெம்பர் 05 முதல் 07 வரை	3 நாட்கள்	ஆசிய அனர்த்த முன்ஆயத்த நிலையம் (ADPC) வலய ஆலோசனை குழு RCC) 17 வது கூட்டம்
10	பிகேடியர் எல்.ஏ.சி.பெரேரா	பணிப்பாளர் (கருமமாற்ற)	பாகிஸ்தான்	2022 டிசெம்பர் 05 - 11	7 நாட்கள்	6 வது சர்வதேச சமூக அவசர பதிலிருப்பு குழு / தொண்டு குழுக்களின் சவால்கள்
11	ஈ.எம்.எல்.உதயகுமார்	உதவி பணிப்பாளர் (பதுளை)	பாகிஸ்தான்	2022 டிசெம்பர் 05 - 11	7 நாட்கள்	6 வது சர்வதேச சமூக அவசர பதிலிருப்பு குழு / தொண்டு குழுக்களின் சவால்கள்
12	குரூப் கெப்டன் எம்.பி.எஸ்.மாரப்பெரும	வான்படை ஒருங்கிணைப்பாளர்	பாகிஸ்தான்	2022 டிசெம்பர் 05 - 11	7 நாட்கள்	6 வது சர்வதேச சமூக அவசர பதிலிருப்பு குழு / தொண்டு குழுக்களின் சவால்கள்
13	கட்டளை அதிகாரி ஜி.பி.மதுஷங்க	கடற்படை ஒருங்கிணைப்பாளர்	பாகிஸ்தான்	2022 டிசெம்பர் 05 - 11	7 நாட்கள்	6 வது சர்வதேச சமூக அவசர பதிலிருப்பு குழு / தொண்டு குழுக்களின் சவால்கள்
14	எ.சி.எஸ். அபேகொட	முகாமைத்துவ உதவியாளர் (இரத்தினபுரி)	பாகிஸ்தான்	2022 டிசெம்பர் 05 - 11	7 நாட்கள்	6 வது சர்வதேச சமூக அவசர பதிலிருப்பு குழு / தொண்டு குழுக்களின் சவால்கள்
15	ஜே.எம்.எஸ். ஜயவீர	பணிப்பாளர் (முன்ஆயத்தம்)	நேபாளம்	2022 டிசெம்பர் 08 - 09	2 நாட்கள்	பல்இடர் அபாய மற்றும் இலாப மற்றும் நட்டம மதிப்பீடு பற்றிய அலோசனை மாநாடு

4.3 தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

பொதுத் திறைசேரியானது பின்வருமாறு 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகளை: தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டள்ள தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் அனர்த் தணிப்பு கருத்திட்டங்களை முன்னெடுத்தல், அனர்த்தங்களை அடையாளம் காணுதல் மற்றும் மாவட்ட ரீதியில் அபாய தோற்றப்பாடுகளை உருவாக்குதல், அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஆராய்ச்சி பங்களிப்பினை வழங்குதல் மற்றும் அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தி சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல் ஆகிய வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின பொறுப்பு மற்றும் கடமையை நிறைவேற்றுவதில் பங்களிப்பனை வழங்குகின்றது. இதற்கமைய 2022அம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான நிதி மற்றும் பௌதீக தேர்ச்சியிலான சுருக்கம் பின்வருமாறாகும்.

அட்டவணை 4.3.1: இதற்கமைய 2022அம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான நிதி மற்றும் பௌதீக தேர்ச்சியிலான சுருக்கம் பின்வருமாறாகும்.

செலவுத் தலைப்பு	கருத்திட்டம்	2022 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி (ரூ.மி.)	நிதி தேர்ச்சி (ரூ.மி0	பௌதீக தேர்ச்சி (%)
3-2509	அனர்த் தணிப்பு கருத்திட்டங்கள்	75	70.31	85%
10-2509	அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	00	00	60%
7-2509	அனர்த் அபாய மதிப்பீடு	01	0.642	60%

4.3.1 அனர்த்த தணிப்பு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

இலங்கையில் அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் இப்பிரிவின் முதன்மைப் பணியாக அமைவதுடன், இதன்போது ஒவ்வொரு வருடத்துக்கும் பொதுத்திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை முகாமைத்துவம் செய்தவாறு அனர்த்த தணிப்பு கருத்திட்ட பிரேரணைகளின் முன்னுரிமைக்கு ஏற்ப கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதன்போது பல்வேறு அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்கள் உரிய நிரல் அமைச்சினால் குறிப்பிட்ட அமைச்சுக்கு உரித்தான நிதி ஏற்பாடுகள் வழியாக மேற்கொள்ளப்படுவதற்காக ஆற்றப்படுத்தப்படுவதுடன், முன்னரிமைக்கு ஏற்ப எனைய அனர்த்த அபாய தணிப்பு பிரேரணைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்போது மாவட்ட மட்டத்தில் கோரப்படும் அனர்த்த தணைிப்பு கருத்திட்டங்களைக் கருத்தில கொண்டு தெசிய மட்டத்தில் நியமிக்கப்படும் குழுவினால் அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், பின்னர், குறிப்பிட் கருத்திட்ட பிரேரணைகளுக்கான விபரமான மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் உரிய எனைய தொழிநுட்ப அறிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாவட்ட செயலாளர்களுக்கு நிதியை

விடுவிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.இ

கருத்திட்ட முன்னெடுப்பானது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் நேரடியாக மேற்பார்தை செய்யப்படுவதுடன், தேசிய மட்டத்திலும் கருத்திட்டத்தின் தேர்ச்சி குறித்து மேற்பார்வை செய்யப்படும். ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் தேவையான பல்வேற தொழிநுட்ப உதவிகள் மாவட்ட மட்டத்தில் இதற்கான தொழிநுட்ப நிறுவனங்களினால் வழங்கப்படுவதுடன். மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக நிதி பரிமாற்றம் மேற்கொள்ளப்படும். கருத்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர், முறையான கள பரிசோதனையின் பின்னரி கருத்திட்டம் சிறப்பாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக உரிய தொழிநுட்ப விதப்புரைகள் சகிதம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அறிவிக்கப்படும்.

அனர்த்தம் பற்றிய தரவுகள் மற்றம் மாவட்ட ரீதியில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள தணிப்பு கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக ரூ.100 மில்லியன் 2022 ஆம் ஆண்டுக்காக பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளபோதிலும், பின்னர், 75 மில்லியனாக இரண்டாவது தவணையில் திருத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், கடந்த வருடத்தில் ஏற்பட்ட பல்வேறு நடைமுறைசார் விடயங்கள் காரணமாக மாவட்ட செயலகத்தினால் கோரப்பட்டுள்ள பண முற்பணம் 111 கிடைக்கப்பெறாமையால் 2021ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்கான 7.46.06 மில்லியன் நிதியிக்கான நிதி ஒதுக்கீட்டை 2022ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினைக் கொண்டு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன், 2021 முதல் 2022 வரையில் பூர்த்தி செய்யப்படாதுள்ள 9 கருத்திட்டங்களுக்காக ரூ.53.94 மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டி நேர்ந்துள்ளது. ஆரம்பத்தில் 2022ஆம் ஆண்டில் எந்தவொரு கருத்திட்டத்தையும் ஆரம்பிக்க முடியவில்லை. மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் துரிதமாக ஏற்பட்ட விலை ஏற்றம் என்பன கருத்திட்டங்களை முன்னெடுப்பதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின.

டிசம்பர் 31, 2022க்குள் தணிப்பு திட்டங்களின் கீழ் குறிப்பிட்ட ஒதுக்கீடுகளின் ஒதுக்கீடு தொடர்பான முன்னேற்றத்தின்படி, ரூ. 70.31 மில்லியன் நிதி முன்னேற்றமும் 85% பௌதீக முன்னேற்றமும் பதிவாகியுள்ளது. 2021 ஆம் ஆண்டு தொடர்பான கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களை செலுத்த ரூ. 45.90 மில்லியன் மற்றும் முடிக்கப்படாத திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்களுக்கு ரூ. 24.41 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. முடிக்கப்படாத திட்டங்களில், நான்கு திட்டங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.திறைசேரி சுற்றறிக்கை மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் தொடர்பில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் ஏனைய கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட ஒதுக்கீடு மற்றும் காலக்கெடுவைக் கருத்தில் கொண்டு டிசம்பரில் தொடங்கப்பட்ட 6 சிறிய அளவிலான புதிய திட்டங்களுக்கான ஒதுக்கீடு செலுத்தப்பட்டுள்ளன.

4.3.2. அபிவிருத்தியின் முக்கிய நீரோட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பினை ஒருங்கிணைத்தல்

அனர்த்த முகாமைத்துவ விடயம் ஒரு கூட்டுச் செயற்பாடாக இருக்க வேண்டும், இதற்கு அனைத்துத் துறைகளினதும் பங்களிப்பு இன்றியமையாததாகும். இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் நாட்டில் எங்கும் ஏற்பட வாய்ப்புள்ளதால், நீர், நிலம் மற்றும் காற்று ஆகிய அனைத்து துறைகளிலும் உள்ள நடவடிக்கைகளுடன் அனர்த்த அபாயத் தணிப்பு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நடைமுறைத் தன்மையைக் கருத்தில் கொண்டு, அனர்த்த அபாய முகாமைத்துவத்தில் நேரடியாகப் பங்களிக்க வேண்டிய 10 துறைகள் கண்டறியப்பட்டு, அந்தத் துறைகளின் வளர்ச்சியின் முக்கிய நீரோட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பினை ஒருங்கிணைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு, பின்வரும் பகுதிகளுக்கான வளர்ச்சியின் முக்கிய நீரோட்டத்தில் பேரிடர் அபாயக் குறைப்பை ஒருங்கிணைப்பதற்கான வழிகாட்டுதல்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

தேசிய திட்டங்களை தயாரித்தல்

- நகர்ப்புற வளர்ச்சி
- தேசிய மற்றும் மாகாண நெடுஞ்சாலை நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி
- உள்ளூராட்சி மன்றங்கள்
- சுற்றுலா
- தனியார் துறை
- ஆரோக்கியம்
- தண்ணீர் மற்றும் சுகாதாரம்
- சுற்றுச்சூழல் தாக்க ஆய்வுகள்
- உள்ளூர் அனர்த்த முகாமைத்துவ செயல்நுணுக்கங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் இந்த வழிகாட்டுதல்களை அச்சிட்டு அந்தந்தப் பகுதிகளுக்கு வழங்கவுள்ளதுடன், தொழில்நுட்ப செயற்குழு உறுப்பினர்களின் தலைமையில் அந்த துறைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களில் அனர்த்த அபாய முகாமைத்துவத்தை ஒருங்கிணைக்கும் குழுக்களை தாபித்து இதன் வழியாக வழிகாட்டுதல்களை செயல்படுத்த ஊக்குவிக்கப்பட்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டில், நகர்ப்புற மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு தொடர்பான வழிகாட்டுதல்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொண்டு அதிகாரிகளை அறிவுறுத்தி நெடுமுறைப்படுத்தத் தேவையான செயற்பாடுகளை தொடங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும், திருத்தப்பட்ட விதிகளின் கீழ் இதற்கான தொகை எதுவும் ஒதுக்கப்படாததால், இந்த நடவடிக்கைகள் தொடர்வது தடைபட்டது, ஆனால் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஆரம்பக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து குறிப்பிட்ட கலந்துரையாடல்களுக்கு உகந்த அதிகாரிகளின் பெயர்களைப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது.

4.3.3 அனர்த்த அபாயத்தைக் குறைப்பதில் நிறுவனங்களின் பொறுப்புகள் மற்றும் விடயப்பொறுப்புகள் மற்றும் மக்களின் உரிமைகள் பற்றிய ஆவணத்தை உருவாக்குதல்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் அனர்த்த அபாயத்தைக் குறைப்பதில் பிரதானமாக ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் ஆரம்பமான செயலமர்வு ஒன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றதுடன் அதற்கான ஆரம்ப ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அடையாளம் காணப்பட்ட 52 நிறுவனங்கள் தொடர்பான ஆணைகள் மற்றும் சட்ட ஆவணங்கள் (அத்தகைய ஆதாரங்களைக் கண்டறிவது கடினமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், நிறுவனத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்) மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படைப் பொறுப்புகள் மற்றும் அனர்த்த அபாயத்தைக் குறைத்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்புடைய பொறுப்புகள் குறித்து வரைவு செய்யப்பட்டன.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் வரைவு ஆவணம் முழுமையான ஆவணமாகத் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, 2022 நவம்பர் 24 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வரைவு ஆவணத்திற்கான முன்மொழிவுகள் மற்றும் சம்மதத்தை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் பெறுவதற்கான கூட்டம் நடைபெற்றதுடன், இதற்காக தற்போது தயாரிக்கப்பட்ட 52 நிறுவனங்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் உட்பட 70 நிறுவனங்கள் ,மற்றும் 18 நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன்படி, செயலமர்வில் பெறப்பட்ட யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்டு, திருத்தப்பட்ட வரைவுகளை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன. திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு எதுவும் ஒதுக்கப்படாவிட்டாலும் ருணூீ நிதியுதவியுடன் இந்த செயலமர்வு நடத்தப்பட்டது.



2022 நவம்பர் 24ஆந் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மாநாடு

4.3.4 அனர்த்த அபாய மதிப்பீடு

நாட்டில் ஏற்படும் அனர்த்தங்கள், வானிலை மற்றும் தட்பவெப்ப நிலைகள், நிலப்பரப்பு, பொருளாதார, சமூக மற்றும் பௌதீக பின்னணி போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அனர்த்த அபாய சூழ்நிலைகளை அறிவியல் பூர்வமாக கணிக்க முடியும்.பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள்,

அறிக்கைகள் போன்றவை உதவகின்றன. மேலும், அனர்த்த சூழ்நிலை ஏற்பட்டால், ஒவ்வொரு அனர்த்தத்துக்கும் ஏற்ப பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள், பாதுகாப்பான இடங்கள் போன்ற பல்வேறு தகவல்களைத் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரித்து, அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளின் பயன்பாட்டுக்கு உகந்த முறையில் தயார் செய்வது மிக அவசியம். மேலும், மேலும், அனர்த்த ஆபாய மதிப்பீடு தொடர்பான தகவல்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவத்துக்கான பல்வேறு முடிவுகளை பெற்றுக்கொள்வதும் நிகழ்ச்சிகளை திட்டமிடுவதும் இலகுபடுத்தப்படுகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நகரங்களில் அனர்த்த அபாய மதிப்பீடு

தெரிவு செய்யப்பட்ட 10 நகரங்களில் (கம்பஹா, நீர்கொழும்பு, மன்னார், களுத்துறை, கடுவெல, கொலன்னாவ, மொரட்டுவ, வெல்வெட்டித்துறை, பேதுருதுடுவ மற்றும் சாவகச்சேரி) அனர்த்த அபாய மதிப்பீட்டிற்கான தரைமட்ட தரவு சேகரிப்பு நிறைவடைந்துள்ளதுடன், 10 நகரங்கள் தொடர்பான தரவுகளின் கணினிமயமாக்கலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அபாய விவரக்குறிப்பு உருவாக்கம் நடைபெற்று வருகிறது மற்றும் அபாயங்களை வரைபடமாக்கல், ஆபத்துக்கு ஆளாதலை கணிப்பிடுதல் மற்றும் அபாய கணிப்பீடு ஆகியவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

அதன்படி, 2022 ஆம் ஆண்டில் தொடர்புடைய வரைபடங்களின் கீழ்மட்ட உறுதிப்படுத்தல் திட்டமிடப்பட்டது, ஆனால் ஆண்டின் தொடக்கத்தில் நாட்டில் நிலவிய குறிப்பிட்ட சூழ்நிலைகள் மற்றும் திருத்தப்பட்ட வரவு- செலவின் கீழ் போதுமான ஒதுக்கீடுகள் இல்லாததால், அந்த திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை.

கல்வித் துறையில் அனர்த்த அபாய மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்

தேசிய மட்டத்தில் கல்வித்துறையில் பாடசாலை அனர்த்த அபாய மதிப்பீட்டை நடத்த வேண்டியதன் அவசியம் கல்வித்துறைக்குள்ளேயே பல சந்தர்ப்பங்களில் எழுந்ததுடன், இது நடப்புசார் தேவையாகவும் இருந்தது. இதன்படி, இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கான அனர்த்த அபாய சுட்டெண் ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஆரம்பத் தலையீடுகளை இந்தப் பிரிவு மேற்கொண்டது.

கல்வி அமைச்சுடன் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டு கல்வி வலய பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டு இடர் சுட்டெண் தயாரிப்பதற்கான தரவு சேகரிப்பு தொடர்பான கேள்வித்தாள்கள் மூலம் தகவல் சேகரிக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. குறிப்பாக 2022ஆம் ஆண்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை பின்வருமாறு சுட்டிக்காட்டலாம்.

- வினாத்தாள்களைப் பெறாத பாடசாலைகளின் பட்டியல்கள் மாவட்ட அளவில் தயாரிக்கப்பட்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு கேள்வித்தாள்கள் சேகரிக்கும் பணி நிறைவு பெற்றது. கேள்வித்தாள்கள் காணாமற்போயுள்ள பாடசாலைகளுக்கு Google Form படிவத்தை பயன்படுத்தி மீண்டும் கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு அதன் மூலம் அந்த பாடசாலைகளிலிருந்தும் தகவல்களும் பெறப்பட்டன.

- சேகரிக்கப்பட்ட அனைத்து வினாக்கொத்துக்களும் தகவல் தரவு தொகுதியில் உள்ளடக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.
- அணுகலைப் Access பயன்படுத்தி தரவு உள்ளீட்டை எளிதாக்கத் தயாரிக்கப்பட்ட தரவு முறைமையைப் பயன்படுத்தி தனித்தனியாக தரவுகளை உள்ளடக்கப்பட்டிருந்த 54 தரவு முறைமைகள் தனி தரவு முறைமையாக தயாரிக்கப்பட்டது.
- கல்வி அமைச்சுடன் கலந்துரையாடி அவர்களின் அடிப்படைப் பாடசாலை தரவு முறைமையை பெற்றுக்கொண்டு அந்தத் தரவு அமைப்பில் உள்ள புதுப்பிக்கப்பட்ட தகவல்களை எங்கள் தரவு அமைப்பில் எளிதாக உள்ளீர்க்கக் கூடியவாறு பாடசாலையின் Census Number நிரல் எங்கள் தரவு அமைப்பில் சேர்க்கப்பட்டது.
- அதன்படி, இதுவரை 10,157 பாடசாலைகளை கொண்டுள்ள பாடசாலை தரவு முறைமையின் அடிப்படைத் தகவல்கள் அனைத்தும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- இடர் மதிப்பீட்டிற்கு முக்கியமான சில கேள்விகளுக்கான பதில்களை சில பாடாலைகள் வழங்கவில்லை என்பது அடையாளம் காணப்பட்டது. தற்போது இத்திணைக்கள அதிகாரிகளையும், வதிவிட பயிற்சிக்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களையும் பயன்படுத்தி பாடசாலை அதிபர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து தரவு முறைமையின் குறைபாடுகளை இனங்கண்டு முழுமையற்ற தகவல்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

அனர்த்த மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஒரு முழுமையான தரவு முறைமை தேவைப்படுவதால், கிடைக்கக்கூடிய மனித வளங்களை அதிகபட்சமாக பயன்படுத்தி தரவு முறைமையை நிறைவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காகப் வதிவிடபயிற்சியின் கீழ் இணைந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொடுப்பனவாக ரூ. 0.5235 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அனர்த்த மதிப்பீட்டைத் தொடர்ந்து, அனர்த்த அபாயத்தைக் குறைப்பது தொடர்பாக முடிவெடுப்பதற்கு பாடசாலைகளில் அனர்த்த அபாயத்தைக் கண்டறிந்து முன்னுரிமை அளிப்பது முக்கியம், மேலும் அனர்த்த அபாயத்தைக் குறைப்பதற்கான தொழில்நுட்ப அணுகுமுறைகளும் பாரிய பங்களிப்பு நல்கும்.

அனர்த்த அபாயத்தை தணிப்பதற்காக உயர் அபாயத்தைக் கொண்டுள்ள துறைகளை அடையாளம் கண்டு அனர்த்த அபாய மதிப்பீட்டை மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம்


செந்தாய் கட்டமைப்பின்படி உலகளாவிய செயல்முறையிலும், உள்நாட்டில் அனர்த்த அபாயத்தைக் குறைப்பதற்கான மூலோபாயத் திட்டத்தின் படியும், 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு செயல்முறையின் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், அனர்த்தம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ள பிரதேசங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டு, அப்பகுதிகளில் அனர்த்த அபாயத்தைக் குறைப்பதற்கான தொழில்நுட்ப அணுகுமுறையின் தேவை கண்டறியப்பட்டுள்ளது.

சிறப்புப் பராமரிப்பு நிலையங்கள், குழந்தைகள் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற பல்வேறு தேவைகளைக் கொண்ட குழந்தைகள் வசிக்கும் இடங்களைக் கருத்தில் கொண்டு, இவர்கள் அனர்த்தங்களுக்கு ஆளாவதற்கான சாத்தியம் அதிகமாக உள்ள குழுவாக இருப்பதால், அவர்களின் அனர்த்த அபாயத்தை மதிப்பிடுவது இன்றியமையாததாகும். அந்த மதிப்பீட்டின்படி, அனர்த்த அபாயத்தைக் குறைப்பது தொடர்பான முடிவுகளை செயல்படுத்துவது எளிதாக அமையும்.

அதன்படி, 2020 ஆம் ஆண்டில், குறிப்பிட்ட குழுக்களில் தேசிய அளவிலான அனர்த்த அபாய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, அதற்காக, குறிப்பிட்ட துறைகள் தொடர்பான இரண்டாம் நிலை தரவுகளை சேகரித்து, வினாக்கொத்துக்கள் தயார் செய்யப்பட்ட தரவு சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை, 25 மாவட்டங்களை உள்ளடக்கிய அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டு வினாக்கொத்து விநியோகம், தரவு சேகரிப்பு மற்றும் தரவு கணினிமயமாக்கல் ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தரவைப் பயன்படுத்தி அபாய சுட்டியை உருவாக்கும் முறை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

அபாய மதிப்பீடானது பங்காளி நிறுவனங்களில் பயன்படுத்தப்படுவது பற்றிய வினாக்கொத்து மதிப்பீடு


ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
Disaster Management Centre

Section 1 of 17

SURVEY ON THE STATUS OF DISASTER RISK ASSESSMENT IN SRI LANKA

In the following pages you will find a detailed questionnaire which will be used in order to develop a risk assessment methodology that will be feasible and easy to implement by the partners represent different sectors.The purpose of the questionnaire is to:

a. Create a better understanding on the expectations and objectives of the different sectors on disaster risk assessment methodology
b. Collect information concerning the existing situation in each individual institution regarding the legal requirements and the methods they have been using for assessing and mapping disaster risk;
c. Examine the availability and accessibility of data that are essential to implement the disaster risk assessment and to produce risk maps and;
d. Provide a basis for developing the new risk assessment methodology based on sector requirements

The questionnaire only takes into account hazard types that are related to climate variability and change (e.g. floods, landslides, cyclone etc.). Thus information regarding technological and industrial hazards are not required. Please complete carefully the following sections and do not hesitate to contact the Disaster Management Center, Mitigation Research and Development Division in case you have any questions.
This link (https://www.dropbox.com/s/6w97oqsn0c52a5/APPENDIX%20I.pdf?dl=0) provides a glossary which you can find the definitions of the most common terms in risk assessment that are also used throughout the questionnaire. At this stage of the survey, it is requested to provide information regarding the availability and accessibility of the different data.


DISASTER MANAGMENT CENTRE / MITIGATION, RESEARCH & DEVELOPMENT UNIT / TEL : 0112 136 141 / 0770682970

கூகுள் படிவத்தைப் பயன்படுத்தி விரிவான கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குதாரர் நிறுவனங்களால் எளிதில் செயல்படுத்தக்கூடிய இடர் மதிப்பீட்டு முறையை உருவாக்கத் தேவையான தகவல்களைச் சேகரிக்க 132 பங்குதாரர் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது. குறிப்பாக, பங்குதாரர் நிறுவனங்களின் இடர் மதிப்பீட்டின் நோக்கங்களை அடையாளம் காணும் நோக்கத்துடன், இடர் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான சட்டக் கட்டமைப்பு, மதிப்பீடு மற்றும் வரைபடத்தை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள், செயல்படுத்த தேவையான தகவல் வடிவங்களை அடையாளம் காணுதல். இடர் மதிப்பீடு மற்றும் இடர் மதிப்பீட்டில் உருவாக்கப்பட வேண்டிய அம்சங்களை அடையாளம் காணுதல் முதலியவற்றை நோக்காகக் கொண்டு இந்த வினாக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 48 நிறுவனங்கள் வினாக்கொத்தை பூர்த்தி செய்து எங்களிடம் வழங்கியுள்ளன. இது தொடர்பான அறிக்கையை 2023ஆம் ஆண்டு தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.


4.3.5 தொலைதூர உணர்திறனை அடிப்படையாகக் கொண்ட காட்டுத் தீ சேதத்தை மதிப்பிடும் செயன்முறையினை அறிமுகப்படுத்துதல்.

வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றம் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளுக்கு இரண்டு பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் காட்டுத் தீயினால் ஏற்படும் சேதங்களை செயற்கைக்கோள் படங்கள் மற்றும் Google Earth Engine மூலம் எளிதில் மதிப்பிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. UN Spider வழங்கிய ஆலோசகர் செல்வி. தீபாவின் ஆதரவுடன் இது முன்னெடுக்கப்பட்டது.




4.3.6 தினசரி காட்டுத் தீ கண்காணிப்புக்கு ஆன்லைன் ஜிஐஎஸ் அமைப்பை ழுடெநெ புஜளு உருவாக்குதல்

Fire Information for Resource Management System, NASA வள முகாமைத்துவஅமைப்புக்கான தீ தகவல், நாசா இணையதளம் வழங்கிய நிகழ்நேர காட்டுத் தீ இருப்பிடத் தரவை இணைத்து Online GIS அமைப்பை உருவாக்குதல். வன மற்றும் வனவிலங்கு வலயத்தின் இடஞ்சார்ந்த தரவுகள் மற்றும் நிர்வாக எல்லை இடஞ்சார்ந்த தகவல்கள் (மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவுகள், உள்ளூராட்சி மற்றும் கிராமிய சேவை அலுவலர் பிரிவுகள்) அவசரகால செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் வகையில் இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, தினமும் காட்டுத் தீ ஏற்படும் இடங்களை எளிதாகக் கண்டறியவும், அந்த இடங்கள் தொடர்பான மேற்கண்ட தகவல்களை மிக எளிதாகப் பெறவும் இந்த அமைப்பின் மூலம் முடியும்.



4.3.7 அனர்த்த இழப்புகள் மற்றும் சேதங்களின் மதிப்பீடு

அனர்த்த இழப்புகள் மற்றும் சேதங்களை மதிப்பிடுவது தொடர்பான நடவடிக்கைகள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன, இதற்காக அடையாளம் காணப்பட்ட துறைகளின் திறன் மேம்பாடு தரவுகளைப் புதுப்பிக்கும் முறைகளை உருவாக்குவதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. பங்குதாரர் பிரதிநிதிகளுக்கு இழப்பு மற்றும் சேதம் குறித்த கட்டப்பட்ட தரவு அமைப்பின் பயன்பாட்டாளர் உடன்பாட்ட பரிசோதனையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டபோதிலும் போதுமான ஏற்பாடுகள் இல்லாததால், இந்த பணிகள் தடைபட்டன.




"இலங்கையில் வரலாற்று அனர்த்த தகவல் முறைமை" **"Historical disaster information system in Sri Lanka"** புத்தகத்தை தயாரித்தல்.

1974 முதல் 2020 வரை ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலைகள் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் உள்ளடக்கியதாக இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. (User Acceptance Testing) தரவுத்தளத்தில் குறிப்பாக உள்ளிடப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு மூலம் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது மற்றும் தரவு அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் வரைபடங்களின் வடிவத்தில் குறிப்பிடப்படுகிறதன. இதன் மூலம் இலங்கையில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் தொடர்பில் முழுமையான புரிதலை பெறறுக்கொள்ள முடியும்.

4.3.8 Desinventar தரவுக்களஞ்சியம்

அனர்த்த அபாயத்தை தணித்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியம் என்பதுடன், இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஒவ்வொரு படிமுறையாக நீண்ட காலத்தில் பரந்ததொரு பரப்பினுள் விரிவடைந்து செல்லுமாறு திட்டமிட்டு செயற்படுத்துதல் வேண்டும். இதன்போது அனர்த்த அபாய தணிப்பு குறித்த ஆய்வுக்கு அடிப்படையாகக் கொள்வதற்காக சரியானமுறையில் இற்றைப்படுத்தப்படும் தரவு அடிப்படையொன்று காணப்படுவது முக்கியமானதாக அமைவதுடன், இத்தேவையினைக் அடையாளம் கண்ட, தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையினால் 2008ஆம் ஆண்டு முதல் **Desinventar** தரவுக் களஞ்சியம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அனைத்து தரவுகளும் இணைத்தளத்தில் வெளிப்படையாகக் காணப்படுவதுடன், இத்தரவுகளை தேவையான எவருக்கும் இணைத்தளத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்வதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.



Desinventar தரவு முறைமையில் தரவு சேகரித்தல் மற்றும் சேகரிப்ப முறை

அனர்த்தங்கள் பற்றிய கடந்த அனைத்து தரவுகளும் உள்ளடங்கிய www.desinventar.lk என இணையத்தில் விடுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு சம்பவம் தொடர்பிலும் மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுகள் வாரியாக குறிப்பிட்ட அனர்த்தங்களின் கீழ் குறிப்பிட்ட காலங்களில் இடம்பெற்றுள்ள உயிரிழப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் சேதமடைந்துள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புள்ளிவிபரரீதியில் இந்த முறைமையில் உள்ளக்கப்பட்டுள்ளன.

உருவப்படத்தில் காட்டப்படும் தரவுகளை சேகரிக்கும் மற்றும் இற்றைப்படுத்தும் செயன்முறைக்கு அமைய 15 நாட்களுக்கு ஒரு தடவை இத்தரவு முறைமை இற்றைப்படுத்தப்படும். பொலிஸ் அறிக்கைகள் (www.police.lk) போன்ற துறைகளினால் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளும் இத்தரவு முறைமையில் உள்ளக்கப்பட்டுள்ளன. இத்தரவு முறைமையானது தன்னிச்சையாக இற்றைப்படுத்தப்படுவதுடன், புதிய தரவு மூலாதாரங்களை அடையாளம் கண்டவாறு மிகவும் சரியானதொரு தரவு முறைமையாக அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்

4.3.9 riskinfo அபாய தகவல் இணையத்தளம் (riskinfo web potal)

புவியியல் தரவுகள் (Geospatial Data) இந்த இணையத்தளத்தில் பதிவேற்றம் (upload) செய்யப்படுகின்றன. இப்புவியில் தரவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதுடன், இதன் மூலம் அனர்த்தங்கள் நிகழும் மற்றும் நிகழக்கூடிய பிரதேசங்கள் தொடர்பில் ஆய்வு செய்தல், தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் எதிர்கால் திட்டங்களை தயார் செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படும்.

எவ்வித கட்டணம் செலுத்துதலுமின்றி, இணையத்தின் ஊடாக இத்தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. பல்கலைக்கழங்களில் கல்வி

பயிலும் மாணவ மாணவியர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் தணிப்பு மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ துறை சார்ந்த புதிய மனிதவளங்கள் உருவாதலினை இதன் ஒரு துணைவிளைவாக குறிப்பிட முடியும்.

4.3.10 பருவப்பெயர்ச்சி வரைபடங்களை தயார் செய்தல்

பருவப்பெயர்ச்சி மழைக்கு முன்கூட்டியே தயாராவதற்காக இதற்கான தரவுகளை அடிப்படையாகக் கொண்ட வரைபடங்களை தயார் செய்தல் மற்றும பருவப்பெயர்ச்சி மழைக்கு பின்னர் இதற்கான வரைபடங்களை தயார் செய்யம் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.3.11 செய்மதிகளைப் பயன்படுத்தி அனர்த்தங்களுக்கு இலக்கான பிரதேசங்கள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்துதல்

அனர்த்தங்களுக்கு முன்ஆயத்தமாவதற்கம் அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்குமும் அனர்த்தங்கள் நிகழந்துள்ள பிரதேசங்கள் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பற்றிய விபரம் முக்கியமானதாகும். இத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி, தகவல்களை வெளிப்படுத்துதல் தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது வானிலை எதிர்வுகூறல்களை அடிப்படையாகக் கொண்டு, அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் மற்றும் அனர்த்தம் நிகழ்ந்த பின்ரான செய்மதி புகைப்படங்களைப் பெற்றுக்கொண்டு, புகைப்படங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் காணப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட தகவல்களை பெற்றுக்கொள்வத்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சர்வதேச செய்மதி தொழிநுட்ப நிறுவனத்தினால் இப்புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், இதற்கான விசேடமானதொரு வாய்ப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு :இன்டநெஷனல் ஷாட்டர்" (International Charter) மற்றும் " சென்டினல் ஏஷியா" (Sentinel Asia) ஆகிய நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதுடன், அனர்த்தமொன்று நிகழ்வதற்கு முன்னர் உரிய முறையில் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவித்ததன் பின்னர், குறிப்பிட்ட அனர்த்தப் பிரதேசத்தை உள்ளடக்கியவாறு செய்மதி புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், அனர்த்தத்துக்கு முன்னர் மற்றும் பின்னரான புகைப்படங்கள அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்கப்படும். தொழிநுட்ப கருவிகளைப் பயன்படுத்தி இப்புகைப்படங்களை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகள் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும். 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற " புரவி" தொடர்பிலான பகுப்பாய்வு மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வு முறைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டது.

4.3.12 மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறையீடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் கருத்தாய்வுகளுக்கு பதிலிருத்தல்

அனர்த்தங்களை தணித்தல் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் கருத்தாய்வுகளுக்கான பதிலிருத்தல் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைவாக அதற்கான பதிலிருப்பு தீர்மானிக்கப்படும்.

இதன்போது இக்கடிதங்களுக்கான பதில்களை வழங்குவதற்கான இயலுமை குறித்து கவனம் செலுத்தியவாறு, காணப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் கொள்ளவுக்கு ஏற்ப, தொழிநுட்ப விதப்புரைகளையும் கருத்தில் கொண்டவாறு பொதுமக்களின் எதிர்ப்பார்க்கைகளை பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு நல்குதல் தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் நோக்கமாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விடயப்பரப்புக்குள் வரும் கோரிக்கைகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட முகாமைத்துவ பிரிவுகள் ஊடாக தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, இந்த ஆராய்ந்நி அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரிய செயன்முறைக்கு அமைவாக தீர்மானங்களை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதன்போது ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் உரிய தொழிநுட்ப நிறுவனம் மற்றும் நிரல் அமைச்சுக்களுக்கு குறிப்பிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதுடன், சகல கடிதக் கொடுக்கல் வாங்கல் குறித்தும் விண்ணப்பதாரருக்கும் பிரதியொன்று அனுப்பி வைக்கப்பட்டு, அவரை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முன்வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடிதத்துக்கும் எழுத்துமூலமாக பதிலிருக்கப்பட்டுள்ளதுடன், நேரடியாக மேற்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் மற்றும் தொழிநுட்ப அறிவுறுத்தல்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் விண்ணப்பதாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு இறுதியில் கிடைக்கப்பெற்றள்ள அனைத்த கடிதங்களுக்கும் பதிலிருப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4.3.13 ஏனைய நிறுவனங்களுடன் கூட்டு திட்டங்களை செயல்படுத்துதல்

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு ஏஜென்சியின் (JICA) ஆதரவுடன் களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அனர்த்த அபாய தணிப்பினை பிராந்திய பொறிமுறைகளில் ஒருங்கிணைப்பதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டம்

இலங்கையின் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் நிர்வாக அபிவிருத்திப் பொறிமுறையில் அனர்த்த அபாயக் குறைப்பை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (துஜஊய) நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. களனி ஆற்றுப்பள்ளத்தாக்கை உள்ளடக்கிய கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் 04 பிரதேச செயலகப் பிரிவுகளையும் அதனுடன் தொடர்புடைய 04 உள்ளூராட்சி நிறுவனங்களையும் தெரிவு செய்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும் இதற்கென அனைத்து பங்குதாரர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதொரு தொழில்நுட்ப பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக இரண்டு ஒருங்கிணைப்புக் குழு (JCC) கூட்டங்கள் மற்றும் இரண்டு தொழில்நுட்ப செயற்குழு கூட்டங்கள் நடைபெற்றன. இந்தத் திட்டம் தொடர்பாக உள்ளூர் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு நாள் செயலமர்வு நடத்தப்பட்டது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல தடவைகள் கலந்துரையாடப்பட்டதுடன், அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளுக்கான கள அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், உள்ளூர் பொறிமுறையில் அனர்த்த தணிப்பை இணைப்பதில் முக்கியமான அணுகுமுறைகளை அடையாளம் காண உள்ளூராட்சி அமைப்புகளின் பணியாட்குழுவினரின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக வினாக்கொத்து மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அறிக்கையின் வரைவுப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளன. அதன்படி, மூன்றாவது செயற்குழு கூட்டத்தில் இந்த அறிக்கை குறித்து இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்த வினாக்கொத்து கணக்கெடுப்பின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் உள்ளூராட்சி அதிகாரிகளின் பயிற்சி தேவைகளை அடையாளம் காணவும் பயன்படுத்தப்பட்டன.

மேலும் இந்த திட்டத்தின் கீழ், தேசிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் அனர்த்த அபாய தணிப்பினை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த வழிகாட்டுதலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அங்கு, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் திட்ட முன்மொழிவு வடிவத்தில் அனர்த்த அபாயத்தைக் குறைப்பது தொடர்பான பிரச்சினையின் அடிப்படையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டு வருகிறது, மேலும் அந்த நிறுவனத்துடன் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டியின் வரைவானது தற்போது JICA நிபுணர் குழுவின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.





2022 செப்டெம்பர் 1 - 2வத ஒருங்கிணைந்த ஒருங்கிணைப்பு குழு (JCC Meeting)



உள்ளூராட்சி நிறுவனம் (LA) மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான செயலமர்வு - ப.ச.ஞா.மாநாடு



கொழும்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்ப உதவி பணிப்பாளர் மற்றும் குழுவுக்கு கருத்திட்டம் தொடர்பில் விளக்கமளித்தல்



தேசிய பெறுகை திணைக்களம் (NPD) தொடர்பிலான வழிகாட்டல்கள் பற்றிய கருத்துப் பகிர்வு



வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) தொழிநுட்ப செயற்குழு (TWG) அங்கத்தவரை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்துதல்.

<u>அறிவை மேம்படுத்துவதன் மூலம் அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதொரு உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கான UNDP யுஎன்டிபி திட்டம் - நீர்ப்பாசனத் துறை</u>

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பேரிடர்-எதிர்ப்பு உள்கட்டமைப்பை நிறுவுவதற்கான திட்டமிடல் செயல்முறைக்கான அதிகூடிய முதலீட்டு தேவையின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் பாங்காக்கில் உள்ள பிராந்திய மையத்தின் மூலம் அறிவை மேம்படுத்துவதன் மூலம் அனர்த்த எதிர்ப்பு உட்கட்டமைப்பை நிறுவும் கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

